ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 05.04.2021 திங்கட்கிழமை | இதழ் : 126 | பக்கங்கள் : 16



07
நாட்டின் எதிர்காலத்தை வெளிநாட்டு சக்திகள் தீர்மானிக்க அனுமதியோம்!



12
செயற்கை நகங்களை ஒட்டுவதற்கு பாவிக்கும் பசைகள் ஆபத்தானவை!



13
சி.பி.எல். கிரிக்கெட் தொடர்: வடக்கின் வல்லூறுகள் சம்பியன்



14
சீனோபார்ம் தடுப்பூசி இன்று முதல் பாவனை

# வடக்கு, கிழக்கில் இன்று தமிழ் தேசிய துக்கதினம்!

## கறுப்பு கொடிகளை பறக்க விட அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 05

மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் வண. இராயப்பு யோசப் ஆண்டகைக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று திங்கட்கிழமை தமிழ் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. 15



மன்னார் மறை மாவட்டத்தின் மறைந்த ஆயர் வண. இராயப்பு யோசப் ஆண்டகையின் பூதவுடல் நேற்று புனித செபஸ்தியார் பேராலயத்தில் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். ஆண்டகையின் ஊர்தி பயணம் ஆயர் இல்லத்தில் இருந்து செபஸ்தியார் பேராலயத்துக்கு சென்றபோது ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். படம்: எமது மன்னார் நிருபர்

## மாகாண சபை முறையை இரத்துச் செய்ய முடியாது!

### அழுத்தி சொல்கிறார் அமைச்சர் பீரிஸ்



கொழும்பு, ஏப். 02

'அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபை முறைமையை ஒரு தரப்பினரின் குறுகிய நோக்கத்திற்காக இரத்து செய்ய முடியாது. இவ்வாறு மாகாண சபை தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. தேர்தல் முறைமைக்கு தீர்வு கண்டதன் பிறகு மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.' 15

## யோசப் ஆண்டகையின் உடல் இன்று நல்லடக்கம்!

மன்னார், ஏப். 05

தமிழ் மக்களுக்காக ஓயாது உழைத்த மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் உடல் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் நாட்டின் அனைத்து மறை மாவட்ட ஆயர்களின் கூட்டுத் திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. 15

### வடக்கில் 15 பேருக்கு தொற்று

## யாழில் அதிபர், ஆசிரியர் உட்பட 12 பேருக்கு கொரோனா உறுதி

யாழ்ப்பாணம், ஏப்.05

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கும், முல்லைத்தீவில் இருவருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் 15 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி 15

## யாழ். பாடசாலைகள் ஏப். 19 ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஏப். 05

இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போதே - எதிர்வரும் 19ஆம் திகதியே யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளும் திறக்கப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட யாழ். மாநகரம், நல்லூர் பகுதிகளில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்தது. இதனால், கடந்த மார்ச் 29ஆம் திகதி யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த விடுமுறை இன் 15

### "மக்களின் ஆணையை அரசாங்கம் மீறிவிட்டது"

## அரசுக்குள் போராட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்

### உதயகம்மன்பில பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல், 05

"பொதுஜன பெரமுன அரசாங்கம் தனக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களின் ஆணையை மீறிவிட்டது" எனக் குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் உதயகம்மன்பில அரசாங்கத்திற்குள் போராட்டமொன்றினை ஆரம்பித்துள்ளதாகவும் 15

## பொலிஸ்காரரை டிப்பரால் மோதி காயப்படுத்தி விட்டு தப்பிய கும்பல்!

வடமராட்சி, ஏப். 05

மணல் கடத்தலை தடுக்க முயன்ற பொலிஸ் உத்தியோகத்தரை டிப்பர் வாகனம் மோதித் தள்ளி விட்டுச் சென்றது.

வடமராட்சி - வல்லிபுர குறிச்சியில் நேற்று காலை 9 மணியளவில் 15

## உங்களால் முடியாவிடின் ஒதுங்குங்கள் இனப்படுகொலையை நிரூபிக்கிறோம்!

### சுமந்திரன் எம்.பிக்கு சிவாஜிலிங்கம் சவால்

யாழ்ப்பாணம், ஏப். 05

"உங்களால் முடியாவிட்டால் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொள்ளுங்கள். நாங்கள் விசாரணை நடத்தி இனப்படுகொலை நடைபெற்றதற்கான ஆதாரங்களை - தகவல்களை திரட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிரூபித்துக் காட்டுகிறோம்." 15

## இராமநாதன் மகளிர் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 05

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி இன்று முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார். கொரோனா 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை...

இவ்வாறு கூறியிருக்கிறார் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

மினுவாங்கொடையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மாகாண சபை தேர்தல் குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. பழைய தேர்தல் முறையிலா அல்லது புதிய தேர்தல் முறையிலா இந்தத் தேர்தலை நடத்துவது என்ற சிக்கல் நிலை காணப்படுகிறது. இதற்குக் கடந்த அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்பு கூற வேண்டும். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என கூறிக் கொள்பவர்கள் மாகாண சபை தேர்தலை உரிய காலத்தில் நடத்த எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

மாகாண சபை தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்பது குறித்து பாராளுமன்றத்தில் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தேர்தலை விரைவாக நடத்த மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் அமைச்சரவையில் யோசனை முன்வைத்துள்ளார். கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து யோசனை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துமாறு பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இம்முறை மாத்திரம் பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தலை நடத்துவது உகந்தது என்று தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களும், யோசனைகளும் பரிசீலனை செய்யப்படுகிறது - என்றார். (ஐ)

## யாழில் அதிபர்...

செய்யப்பட்டது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களில் இருவர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபரும், ஆசிரியரும் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பனவற்றில் நேற்று 668 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 6 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

மேலும் ஒருவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பணியாற்றுபவர். அவரது குடும்பத்தைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் இருவரும் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## உங்களால்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுக்கு சவால் விடுத்துள்ளார் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் "இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றது என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை", என்று சுமந்திரன் எம்.பி. கூறியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:

"இனப்படுகொலை என்பது நேற்று இன்று நடந்தது இல்லை இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்ற ஒரு விடயம். வட மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல்லாது மாகாண சபையில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்போடு இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது .

இனப்படுகொலை என்பது இன்று நேற்றல்ல 1977ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இனப்படுகொலை நடந்ததற்கு பல்வேறுபட்ட ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இனப்படுகொலை என்பது ஓர் இனத்தை தெரிவு செய்து படுகொலை செய்ய நினைப்பது என்பதை நிரூபிக்க முடியும். அரசாங்கத்துக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலை நடக்கவில்லை என மறைக்காதீர்கள். எமது மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

உங்களால் முடியாவிட்டால் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொள்ளுங்கள். நாங்கள் விசாரணை நடத்தி இனப்படு கொலை நடைபெற்றதற்கான ஆதாரங்களை தகவல்களை திரட்டி எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிரூபித்து காட்டுகிறோம் - என்றார். (ஐ)

## யோசப்...

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசப் 81ஆவது வயதில் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

யாழ். ஆயர் இல்லத்தில் அவரின் உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் மன்னார் ஆயர் இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர அங்கிருந்து புனித செபஸ்தியார் பேராலயத்திற்கு ஊர்தி மூலம் அவரின் உடல் கொண்டு செல்லப்பட்டது. இதன்போது, ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு அஞ்சலி செலுத்தினர். அத்துடன் அவரின் இந்த ஊர்தி பயணத்திலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

செபஸ்தியார் பேராலயத்தில் அவரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில், இன்று மதியம் 2 மணிவரை ஆயருக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று பிற்பகல் 3 மணியளவில் அனைத்து மறை மாவட்டங்களின் ஆயர்களும் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்க, அவரின் பூதவுடல் செபஸ்தியார் பேராலயத்தின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. (ஐ)

## அரசுக்குள்...

தெரிவித்துள்ளார்.

சிலர் அரசாங்கத்திற்குள் உள்மோதல் காணப்படுகின்றதா என கேள்வி எழுப்புகின்றனர் என தெரிவித்துள்ள அமைச்சர், நாங்கள் அரசாங்கத்திற்குள் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம் என்பது உண்மை என குறிப்பிட்டுள்ளார்.

இந்த போராட்டம் அரசாங்கத்தை அழிப்பதற்கானது இல்லை அதனை பாதுகாப்பதற்கானது என தெரிவித்துள்ள அமைச்சர், மக்கள் வழங்கிய ஆணைகுறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

20வது திருத்தம் மக்களின் ஆணையை மீறுவதாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர், நாங்கள் மக்களின் ஆணையை பின்பற்றியிருந்தால் 20வது திருத்தம் சாத்தியமாகியிராது எனவும் தெரிவித்துள்ளார்.

மக்களின் ஆணையை நாங்கள் மதிப்பது என்றால் எங்களிற்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களின் ஆணையை மதிக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் சீன பயணத்துக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவில்லை!

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி கோட்டாபஜ ராஜபக்ஷவின் சீனாவுக்காக உத்தியோகபூர்வ பயண நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவில்லை என்று இலங்கைக்கான மக்கள் சீனக் குடியரசின் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அண்மையில் தொலைபேசி வாயிலாக உரையாடினர். இதன்போது, ஜனாதிபதியை சீனாவுக்கு உத்தியோகபூர்வமான விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஷி ஜின்பிங் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இலங்கைக்கான மக்கள் சீனக் குடியரசின் தூதரகப் பேச்சாளரும் அரசியல் பிரிவுத் தலைவருமான லூ சொங் இவ்விடயம் பற்றி தெரிவிக்கையில், இரு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது. இதன்போது, ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சீனாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

எனினும், தற்போது வரையில் அதற்கான எந்தவிதமான நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்படவில்லை. கொரோனா நிலைமைகள் சுமூகமடைந்ததை அடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் இந்தியா தவிர வேறு எந்த நாட்டுக்கும் இதுவரை உத்தியோகபூர்வ பயணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நண்பர்களுடன் படகில் சென்றவர்! தவறிவீழ்ந்து கடலில் மூழ்கிப் பலி!!

வடமராட்சி, ஏப். 05

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் நண்பர்களுடன் பொழுதுபோக்கிற்காக படகில் பயணித்த இளைஞர் கடலில் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த கெனடி பிறின்ஸ்ரன் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நண்பர்களுடன் படகில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர் தவறிவீழ்ந்துள்ளார். அப்போது படகின் இயந்திரத்தின் சுழலி வெட்டியதில் அவர்படுகாயம் அடைந்து கடலில் மூழ்கினார் என்று கூறப்படுகின்றது.

மூன்று மணி நேரத்துக்கும் மேலாக சுழியோடிகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் பின்னர் அவர் மீட்கப்பட்டார். அவரை அம்புலன்ஸ் மூலம் மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வடமராட்சி கிழக்கு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## இராமநாதன்...

அச்சுறுத்தல் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியர் என இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கு...

இராயப்பு யோசப் ஆண்டகை தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி மக்கள் எழுச்சி அமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்தன. இதற்கு தமிழ் தேசியக் கட்சிகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன. இதற்கு அமைவாகவே இந்த துக்க தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இன்றைய நாளில் வடக்கு - கிழக்கில் வீடுகள், வர்த்தக நிலையங்களில் கறுப்பு கொடிகளை பறக்க விட்டும், மக்கள் கறுப்பு பட்டிகளை உடைகளில் அணிந்தும் துக்கத்தை வெளிப்படுத்துமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய துக்க தினத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுமையாகக் கடைப்பிடிப்பதற்கு முஸ்லிம் மக்களையும் ஆதரவு வழங்குமாறு ரிஷாத் பதியுதீனை தலைமையாகக் கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழகம், புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்கள் கறுப்பு பட்டிகளை அணிந்து துக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன. (ஐ)

# வவுனியாவில் விபத்து இருவர் படுகாயம்!

வவுனியா, ஏப். 05

வவுனியா குருமண்காட்டு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை முச்சக்கரவண்டி மோதியதில் ஏற்பட்ட விபத்தில் அவர்கள் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 7.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய முச்சக்கர வண்டியின் சாரதி மதுபோதையில் இருந்தார் என்று விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் தூக்கி வீசப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்களால் காப்பாற்றப்பட்டு உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

## யாழ். பாடசாலை...

றுடன் முடிவடைய இருந்த நிலையில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனையின் பேரில் சிறப்பு விடுமுறையை ஒரு வாரத்தால் நீடிக்கப்பட்டது. இதனால், யாழ். கல்வி வலயப் பாடசாலைகள் இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போதே திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பொலிஸ்காரரை...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் சட்டவிரோத மணலுடன் டிப்பர் ஒன்று பயணிப்பதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைத்தது. இதனை தடுத்து நிறுத்துமாறு உப பொலிஸ் பரிசோதகர் அஜித் குமார் தலைமையில் 6 பொலிஸார் அடங்கிய குழுவை அனுப்பி வைத்தனர்.

இவர்கள் அந்தப் பகுதிக்கு சென்று மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனத்தை வழிமறித்தனர். ஆனால், அந்த டிப்பர் உபபொலிஸ் பரிசோதகரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அஜித்குமார், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற டிப்பரையும் அதன் சாரதியையும் தேடி வருகின்றனர். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது...!

கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். ஈழநாடு தொடர்ச்சியாக சுமந்திரனை குறிவைத்து தாக்குவது எதற்காக என்று அவர் கேட்டபோது, அப்படி ஒரு எண்ணம் உங்களுக்கு வந்தது எதற்காக என்று கேட்க முடியவில்லை.

சில தினங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியிலேயே கூட்டமைப்பின் தோல்விக்கு சுமந்திரனும் சம்பந்தனும்தான் காரணம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எழுதியிருந்ததை அந்த நண்பர் ஞாபகப்படுத்தினார்.

கடந்த புதன் கிழமையன்றும் இந்தப் பத்தியில், தான் இப்போது திருந்திவிட்டதாக சுமந்திரன் குறிப்பிட்டிருந்ததைப் பற்றி எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து ஒருவர் குறும்செய்தி அனுப்பினார். அவர் அனைத்து தலைவர்களுடன் நெருங்கிப் பழகுபவர். சுமந்திரனுடன் மாத்திரமல்ல, சம்பந்தன், மாவை, சித்தார், செல்வம் என்று அனைவருடனும் நெருக்கமான நட்புக்கொண்டிருப்பவர்.

'இன்றைய ஊர்க்குருவி தரம்' என்ற அவரது குறுஞ்செய்தியைப் பாத்துவிட்டு அவருடன் உரையாட வேண்டிவந்தது.

அப்போது அவர் சொன்ன விடயங்கள் எனக்கு மேற்படி கனடா நண்பருடன் வாதிடுவதனை இலகுவாக்கிவட்டது.

சுமந்திரன் ஒரு நல்ல சட்டவாதியாக இருக்கலாம். அதாவது, அவரிடம் ஒரு பிரச்னையை கொடுத்தால் அதற்கு எப்படித் தீர்வு காண்பது என்று வழக்காடி சிலவேளை அவர் நல்ல தீர்வைத் தரக்கூடும். அதாவது ஒன்றை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால் அதன் பின்விளைவுகளைப் பற்றி தூர நோக்குடன் சிந்திக்காமல் எல்லோரையும் இடித்துத்தள்ளி அதனை அவர் உடனடியாகச் செய்து முடித்துவிடுவார்.

ஆனால், ஒரு நல்ல அரசியல்வாதி என்பவர் - ஒரு இனத்தின் மக்கள் பிரதிநிதியாக இருப்பவர் - தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து, இன்று தான் செய்கின்ற ஒரு விடயம் பல வருடங்களுக்கு பின்னரும், எப்படியான விளைவுகளைத் தரும் என்பதையும், தான் பிரதிநிதித்துவப்படுத்தும்

இனத்தின் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனையும் கணிக்கும் திறன் உடையவராக இருக்க வேண்டும்.

சுமந்திரனின் அரசியல் நகர்வுகளை கவனித்திருப்பீர்கள்:

மாவையரை புறமொதுக்கி விக்கினேஸ்வரனை வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக சம்பத்தனுடன் சேர்ந்து அவர் கொண்டுவந்தார். இரண்டு ஆண்டுகளிலேயே விக்கியரைத் தனது பரம வைரியாக்கி, அவரை வீழ்த்த மாகாண சபையிலிருந்த தனது ஆட்களை வைத்து, விக்கியர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் அல்ல என்றார். நெடும்பார்வையற்ற அந்த சதி முயற்சியிலும் தோற்றார்.

மஹிந்தவை வீழ்த்தும் "டீல்" வழங்கப்பட்ட போது அதில் பங்காளியாகி, சம்பந்தனுடன் சேர்ந்து மைத்திரியை ஆதரிக்க தமிழர்களை வலியுறுத்தினார் சுமந்திரன். ஆனால் பின்பு மைத்திரிக்கும் ரணிலுக்கும் மோதல் வந்தபோது, தூரநோக்கற்று ரணில் பக்கம் நின்றுகொண்டு மைத்திரியை நாயே பேயே என்று விமர்சித்து மைத்திரியின் அரசியல் வாழ்வையே ஆறடி மண்ணில் புதைப்பேன் என்றார். ஆனால், இப்போது மைத்திரி ராஜபக்ஷாக்களின் பக்கம் என்பது மட்டுமல்ல, அவர்களது அரசியலையே தீர்மானிப்பவராக எழுந்து வருகின்றார்.

பலரையும் உதாசீனம் செய்து, தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு, ஆர்னோல்ட்டை யாழ் மாநகர முதல்வராக ஆக்கினார். ஒர் ஊடகவியலாளரை முதல்வராக்க மாவை விரும்பிய போதிலும், "ஆர்னோல்ட்டுக்கு நான் வாக்குக்கொடுத்துவிட்டேன். அவர்தான் முதல்வர்" என்று தனது சுய விருப்பத்தை கட்சியின் மீது திணித்தார். பின்னர், அவர் ஆர்னோல்ட்டையே தனக்கு எதிரியாக்கி, முதல்வர் பதவியிலிருந்து ஆர்னோல்ட்டை வெளியேற்ற அவரே மறைமுகமாக பணியாற்றினார்.

சிறிதரனை தமிழ் கூட்டமைப்பின் பேச்சாளராக்குவதாக அவருக்கு வாக்குறுதி வழங்கி, அவருடன் கைகோர்த்தார். தான்தான் பேச்சாளர் என்று செல்வம் விடாப்பிடியாக நின்ற போது "கடந்த தேர்தலில் சிறீ எனக்காக வேலை செய்தவர். அவரை பேச்சாளராக்குவேன் என்று நான் சிறீக்கு வாக்குக் கெடுத்துவிட்டேன். அதனால் இதனை விட்டுவிடுங்கள்" செல்வத்திடமே வற்புறுத்தினார். ஆனால், பேச்சாளர் விடயத்தில் செல்வம் விட்டுக் கொடுக்காததால், அது இன்றும் இழுபறியில் இருக்கின்றது. ஆனால் சிறிதரனோ இப்போது கட்சிக்குள் சுமந்திரனுக்கு மாற்று அணிக்கு போய்விட்டார். அந்த அணியிலேயே செல்வமும் இருக்கின்றார்.

இந்த நிலைமையில், கடந்த காலங்களைப் போலவே, தனது ஏதாவது நலன்களுக்காக சாணக்கியனையும், கலையரசனையும் கூட விரைவில் தனது எதிரிகளாக்கிவிடுவார் சுமந்திரன்.

இவ்வாறாக - ராஜதந்திரத் திறனுடன், தீர்க்கதரிசனம் மிக்க முடிவுகளை எடுக்கவல்ல ஒர் அரசியல்வாதி தான் இல்லை என்பதை சுமந்திரன் நிரூபித்து வருகிறார் என்று அந்த யாழ்ப்பாணத்து நண்பர் வாதிட்ட விடயங்களே கனடா நண்பரோடு சில நிமிடங்கள் கதைக்க எனக்கு உதவியது.

இந்த பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது - இலங்கையில் இன அழிப்பு நடைபெற்றது என்று கூறினாலும் நீதிமன்றப் பொறி முறைக்குள் அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இருந்தால் மட்டுமே அதனை நாங்கள் கோரவேண்டும் என்றும் நம்மிடம் ஆதாரங்கள் இல்லாதபோது அதனைக் கோருவது நல்லதல்ல என்றும் சுமந்திரன் கூறியதாக செய்தி ஒன்று கிடைத்தது.

இதுகுறித்து நாளை பார்ப்போம்!

- ஊர்க்குருவி.

# மைத்திரிக்கு எதிராக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அரசிடம் பேராயர் வலியுறுத்து



கொழும்பு, ஏப்.05

**ஈஸ்டர் தாக்குதல்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றுள்ளதால், தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.**

ஈஸ்டர் தின வழிபாடுகளுக்குப் பின்னர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதியை எதிர்த்து நடவடிக்கை எடுக்க பல மாதங்கள் ஏன் காத்திருக்க வேண்டும் எனவும் அவர் இதன் போது கேள்வியெழுப்பினார்.

ஏனெனில் ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து அவர் முன்னரே எச்சரிக்கையைப் பெற்றிருந்தாலும் அலட்சியம் காரணமாக தாக்குதலைத் தடுக்கவில்லை என்றும் பேராயர் தெரிவித்தார். மேலும், சஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்புடைய சிலர் இன்னும் பாராளுமன்றத்தில் உள்ளனர் என் றும் அவர் குறிப்பிட்டார்.

(எ)

# நமது மக்களுக்கு சீன தடுப்பூசி வழங்க அனுமதிக்க முடியாது

## எதிர்க்கட்சி போர்க்கொடி



கொழும்பு,ஏப்.05

இலங்கையில் முதற்கட்டமாக அஸ்ராசெனேகா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். அதே வேளை கொரோனா தடுப்பூசி தொடர்பான விஷேட நிபுணர்கள் குழுவால் அனுமதி வழங்கப்படாத சீன (சீனோபார்ம்) தடுப்பூசிகளை நாட்டுக்கு மக்களுக்கு வழங்க அனுமதிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உலக நாடுகள் தடுப்பூசி வழங்கும் செயல் திட்டத்தை துரிதப்படுத்தியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் முதற்கட்ட தடுப்பூசி வழங்கும் செயல்பாடுகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பத்திலேயே இதுதொடர்பான முறையான திட்டமிடல் இன்மையே இக்கட்டான நிலைக்கு காரணமாகும்.

ஆனால், ஆரம்பத்தில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அனுமதி வழங்கப்படாமல் தடுப்பூசியைப் பெற முடியாது என்று கூறிய அரசாங்கம், தற்போது உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத சீன தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதனை விமான நிலையத்துக்குச் சென்று பெற்றுக்கொண்டுள்ளார்.

கொரோனா தடுப்பூசி தொடர்பான விஷேட நிபுணர்கள் அடங்கிய குழு அனுமதியளிக்காத போதிலும், இலவசமாக கிடைக்கப் பெறுகிறது என்பதற்காக அரசாங்கம் சீன தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளது. இலவசமாக வழங்கினால் எதையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலைமையில் தற்போதைய அரசாங்கம் உள்ளது.

இவ்வாறான நிலையில் முதற்கட்டமாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான காலம் அண்மித்துள்ளது. எனவே கூடிய விரைவில் இலங்கைக்கு அடுத்த கட்ட தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதுவரையில் 9 இலட்சம் பேருக்கு முதற்கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கு தற்போது சுமார் 2 இலட்சம் தடுப்பூசிகள் மாத்திரமே அரசாங்கத்திடம் கையிருப்பில் உள்ளன. ஆனால் ஒரு வாரத்தில் 2 இலட்சம் தடுப்பூசிகளை வழங்கி நிறைவு செய்ய முடியும்.

அவ்வாறெனில் ஒரு வாரத்தில் இந்தியாவிடமிருந்து இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியுமா?

எனினும் அஸ்ட்ராசெனேகா தயாரிப்பு நிறுவனம் அவ்வாறு வழங்க முடியும் என்று அறிவிக்கவில்லை.

இது முதற்கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொண்ட மக்களுக்கும் அதன் பயன் இல்லாமல் போகக்கூடிய துரதிஷ்டவசமான செயல்பாடாகும். சீனா தடுப்பூசிகளை வழங்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம். எனினும் உரிய தரப்பினரின் அனுமதியின்றி அதனை நாட்டு மக்களுக்கு வழங்க அனுமதிக்க முடியாது- என்றார். (எ)




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.04.2021 திங்கட்கிழமை
சார்வரி, பங்குனி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஆயர் யோசப் இராயப்பு

ஆயர் இராயப்பு யோசப்பின் மறைவு அதிர்சிகரமான ஒன்றல்ல. ஏனெனில், அவர் சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டு, செயற்பட முடியாத நிலையிலேயே இருந்தார். அவரின் மறைவை முன்வைத்து அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களாக தங்களை காண்பித்துக் கொள்பவர்களும், அனுதாப அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றனர். இன்று துக்க தினத்திற்கான அழைப்பும் விடுக்கப்பட்டிருக்கின்றது. ஆயர் இராயப்பு ஜோசப் தமிழ் மக்களால் நினைவு கொள்ளப்பட வேண்டிய ஒருவர்தான். அதில் மறு பேச்சிற்கு இடமில்லை. ஆனால், அவர் இருக்கின்றபோதே, அவரது பணிகள் நினைவு கூரப்பட்டிருக்க வேண்டும். அவருக்கான ஒரு விழா எடுக்கப்பட்டிருக்கவேண்டும். தமிழ்த் தேசியத்தின் சிவில் சமூக ஆசான் என அவர் போற்றப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை. எவரும் அதற்கு முயற்சிக்கவும் இல்லை.

இராயப்பு ஜோசப் மன்னார் ஆயராக இருந்த காலத்தில், அவர் தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு பலமான குரலாக இருந்தார். ஒரு வகையில் மன்னாரில், எவர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதை தீர்மானிக்கவல்வராக அவரே இருந்தார். இதன் காரணமாகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் பிரதிநிதிகள் அனைவருமே, தேர்தலுக்கு முன்னர் அவரது ஆசிர்வாதத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுண்டு.

2009இற்கு முன்னர் இராயப்பு ஜோசப் ஒரு பலமான குரலாக இருந்தார் என்று கூறமுடியாது. ஏனெனில், இன்று சிவில் சமூகம் தொடர்பில் பேசும் எவருமே 2009இற்கு முன்னர் சிவில் சமூகத்தின் குரலாக இருந்ததில்லை. இருந்திருக்கவும் முடியாது. ஏனெனில், அப்போது எந்தக் குரலாக இருந்தாலும், அது விடுதலைப் புலிகளின் தலைமையின் குரலாகவும் அல்லது, அந்தக் குரலின் பிரதியாகவுமே இருக்க முடியும். ஆனால், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகத் தலைமையாக செயற்பட்டுக்கொண்டிருந்த காலத்தில், வடக்கு கிழக்கை தளமாகக் கொண்டியங்கிய அனைத்து கத்தோலிக்க ஆயர்களுமே, ஏதோவொரு வகையில் தங்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகவே காண்பித்துக் கொண்டனர். அவ்வாறு காண்பித்துக்கொள்ள ஒருவேளை எவராவது விரும்பாதிருந்தாலும்கூட. அவர்கள் நிச்சயமாக தங்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒருபோதுமே காண்பித்துக் கொண்டதில்லை.

2009 இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் இறக்கக்கூடுமென்னும் நிலைமை பலராலும் உணரப்பட்டது. அதனை தடுப்பதற்கு யுத்தத்தை தடுத்து நிறுத்துவதை தவிர, வேறு தெரிவுகள் எதுவுமிருந்திருக்கவில்லை. அவ்வாறான பின்புலத்தில் மக்களின் அவல நிலையை வெளியுலகிற்கு எடுத்துக் கூறும் குரலாக இராயப்பு ஜோசப் வெளிப்பட்டார். ஆனாலும், இராயப்பு ஜோசப்பினது உரத்த குரல் யுத்தத்தை நிறுத்துவதில் எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் அழிவா அல்லது யுத்தத்தை நிறுத்தி மக்களை காப்பாற்றுவதா என்னும் இரண்டு தெரிவுகளில் உலகம் விடுதலைப் புலிகளின் அழிவுக்கே முக்கித்துவம் கொடுத்திருந்தது. கத்தோலிக்க மதத் தலைவர்கள் என்பவர்கள், மேற்குலக தாராளவாத உலகத்திற்கு நெருக்கமானவர்களாக இருந்தபோதிலும்கூட, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது, அவர்களால் ஒரு தாக்கமுள்ள குரலாக தங்களை நிலைநிறுத்த முடியவில்லை என்பதே உண்மை.

2009இற்கு பின்னரான தமிழர் அரசியல் வெளியில் இராயப்பு ஜோசப் ஒரு தனிக் குரலாக வெளியில் தெரிந்தார். தமிழ் சமூகத்தின் சிவில் குரலின் சொந்தக்காரராக மாறினார். 2009இற்கு பின்னர், அவர் இயங்கிக் கொண்டிருந்த காலம் வரைக்கும் - வடக்கு கிழக்கின் சிவில் சமூகம் என்பது, அவரைச் சார்ந்தே இருந்தது. அவரே சிவில் சமூகத்தின் ஒட்டுமொத்த முகமாக இருந்தார். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் என்போரை ஒரிடத்திற்கு கொண்டுவருவதற்கான ஓர் இலகுபடுத்துநராகவும் அவர் இருந்தார். அவர் நோய்வாய்ப்பட்டு, விழுந்த பின்னர், வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தை ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு வலுவான நபராக வேறு எவராலும் அவரின் இடத்தை பிடிக்க முடிந்திருக்கவில்லை என்பது உண்மைதான். தமிழ் சமூகத்தில் பல விடயங்களில் வெற்றிடங்கள் இருப்பது போன்று, சிவில் சமூகத்திற்கான தலைமைத்துவம் என்பதும் ஒரு வெற்றிடமாகவே இருக்கின்றது. இராயப்பு ஜோசப்பின் வெற்றிடத்தை நிரப்பக் கூடிய எந்தவோர் ஆயரையும் இதுவரை வடக்கு கிழக்கு காணவில்லை.

## ஊசலாடும் மாகாணசபை முறைமையின் எதிர்காலம்:

# அரசுக்குள் எதிரும் புதிருமான கருத்துக்கள்!

- அலசுவது இராஜதந்திரி -

இரு தினங்களுக்கு முன்னர் வடக்கே வன்னிப்பகுதிக்கு விஜயம்செய்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலங்கையில் மாகாணசபை முறைமையினை மிகக்கடுமையான முறையில் விமர்சித்திருந்தார். இந்தியாவே இலங்கையின் அரசியல் அமைப்பில் மாகாணசபை முறைமையை திணித்துவிட்டிருந்தது என்று சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

எனவே அட்மிரல் சரத் வீரசேகரவின் இக் கருத்தை பார்க்கும்போது, அவருக்கு இந்தியாவின்மீது வெறுப்பா? அல்லது மாகாணசபை முறைமைமீது வெறுப்பா? என்றே எண்ணத் தோன்றுகின்றது.

எது எப்படியிருந்த போதிலும், அடமிரல் சரத் விரசேகர ஒரு கடும்போக்காளர் என்பதே அவரது அண்மைக்கால அரசியல் நடவடிக்கைகள்மூலம் தெளிவாகியுள்ளது. நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது வகையான நிர்வாகங்கள் இருப்பது முழு நாட்டினதும் ஆட்சியை கேலிக்கூத்தாக மாற்றிவிடுவதாகவே இருக்கின்றது எனத்தெரிவித்துள்ளதோடு, இந்தியாவினால் திணிக்கப்பட்ட மாகாணசபை முறைமையை முற்றிலுமாக நீக்கவேண்டுமென வீரசேகர தெரிவித்துள்ளார்.

**கடும் போக்கு**

தமது அரசியல் வாழ்க்கையை கடும்போக்கான முறையில் ஆரம்பித்துள்ள சரத் விரசேகர, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தத்தின்போது கடற்படையில் பணியாற்றிய வராவார். இவரது சகோதரர் ஜெனரல் ஆனந்த வீரசேகர, இராணுவத்தில் பணியாற்றியதோடு, யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முதலில் முன்வந்த இராணுவ அதிகாரியாகவும் விளங்கியிருந்தார். அத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும் என்பதை முதலில் நிருபித்தவர்கூட, தற்போது ஒரு பௌத்த துறவியாக மாறியுள்ள அன்றைய ஜெனரல் ஆனந்த வீரசேகர என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இராணுவ அதிகாரியாக யுத்த காலத்தில் பணியாற்றியபோதிலும் பிரச்சனைகளை சிக்கலாக்க விரும்பாதவரே அடமிரல் வீரசேகரவின் சகோதரர் ஜெனரல் விரசேகர.

வன்னியில் கடந்த வெள்ளிக்கிழமை இரு பொலிஸ் நிலையங்களை திறந்துவைத்து உரையாற்றியபோது மாகாணசபை முறைமையை வெகுவாக சாடியிருந்தார் அட்மிரல் சரத் வீரசேகர.

**யானைப் பசிக்கு சோளப்பொரி**

இதுவிடயத்தில் அடமிரல் வீரசேகர தெரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் வடக்கு-கிழக்கு தமிழர்கள்கூட "யானைப்பசிக்கு சோளப்பொரியாகவே" மாகாண சபை முறைமையை நோக்குகிறார்கள் என்பதே. .

ஒரு பூரணத்துவமான சமஷ்டி முறையுடன் கூடிய ஆட்சி முறையை எதிர்பார்த்த வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு மாகாணசபை முறைமை எவ்வகையிலும் திருப்தியளிப்பதாக அமைந்திருக்கவில்லை. இருந்த போதிலும் மாகாணசபை முறைமையை அதிகார பரவலாக்கத்துக்கான ஓர் ஆரம்பமாகவே வடக்கு-கிழக்கு மக்கள் நோக்கியிருந்தனர்.

மாகாணசபை முறைமையை நோக்கும்போது அதில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்களான காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பவை கூட முழு அளவில் அமுல்படுத்தப்படாத நிலையே காணப்படுவதுடன், மாகாணசபை முறைமையை உள்ளடக்கியுள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் குறித்து இந்தியாவின் உதவியும் நாடப்பட்டுள்ள நிலையிலேயே தமிழ் அரசியல் தரப்பு காணப்படுகின்றது.

**பேராசிரியர் பீரிஸின் கருத்து**

13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை இனப்பிரச்னையை தீர்க்கும்விடயத்தில் எவ்வளவு தூரம் முக்கியத்துவமானதென்பதை கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளதோடு, 13ஆவது திருத்தச்சட்டம் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டபோது அதனை ஆரம்பத்திலேயே அலசி ஆராய்ந்தவர்களில் ஒருவராகவே பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் விளங்குகின்றார். அவர் ஒருசிலரது குறுகிய நோக்கங்களுக்காக 13ஆவது திருத்தச்சட்டத்தை குறைவாக மதிப்பிடவோ நீக்கிவிடவோ முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.


எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கெதிராக அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்தும் ஆதரவாக அமைச்சர் ஜி. எல். பீரிஸின் கருத்தும் காணப்படுகின்ற நிலையில், அரசாங்கத்திற்குள்ளேயே 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாணசபை முறைமை என்பவை குறித்து எதிரும் புதிருமான நிலைப்பாடு நிலவுவதையே அவதானிக்கமுடிகின்றது.

அமைச்சர் சரத்வீரசேகர கூறுவதுபோல மாகாணசபைமுறைமை நீக்கப்படுமேயானால், வடக்கு-கிழக்கு தமிழர்கள் தமக்கு கிடைத்திருந்த அற்பசொற்ப அரசியல்தீர்வு கூட இல்லாமல்போயுள்ளதென்றே கருதுவர்.

அத்துடன், 1987ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஒரு குழப்பகரமான சூழ்நிலைகூட ஏற்படக்கூடிய நிலைமையே தோற்றம்பெறலாம்.

எனவே, இன்றைய அரசில் ஓர் ஊசலாட்டத்திற்குள்ளாகியுள்ள மாகாணசபை முறைமை எதிர்காலத்தில் எவ்வளவுதூரம் வெற்றிகரமாக செயல்படும் என்பதுட்பட, இதுவிடயத்தில் தமிழ் அரசியல்தரப்பு எவ்வளவுதூரம் மாகாணசபை முறைமையை காப்பாற்றி 13ஆவது திருத்தச்சட்டத்தையும் பூரணமாக அமுலாக்குவதில் தனது பங்களிப்பை வழங்குமென்பதும் கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 5 திங்கட்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 23
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : நவமி




05.04.2021

**மேடம்**
தைரியம் கூடும். எதிர்ப்புகள் விலகும். அனுசரித்து செல்வீர்கள். பேச்சுவார்த்தையில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். மனம் தெளியும்.

**இடபம்**
முயற்சிக்கு ஏற்ற நற்பலன் இருக்கும். பெருமிதம் வரும். புதிய முயற்சியில் நினைத்த முன்னேற்றம் சற்றே தாமதப்படும். உங்களின் அவசரப் பேச்சினால் சிரமங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்**
தெளிவுடன் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களுக்கு நல்ல அறிவுரை வழங்கி நன்மை செய்வீர்கள். அவப்பெயர் ஏற்படுத்திக் கொண்ட நிலை இன்று மாறும்.

**கடகம்**
வருமானத்திற்கு குறைவிருக்காது. மனதில் தெளிவு வரும். மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்வீர்கள். முயற்சி நிறைவேற கடின உழைப்பைக் கைகொள்வீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் நடவடிக்கைகளால் ஏற்பட்டிருந்த வருத்தங்கள் தீரும். பேச்சுவார்த்தை தீர்வு தரும். காலில் ஏற்பட்ட உபாதை சரியாகும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். நண்பருக்கு உதவுவீர்கள்.

**கன்னி**
நெருங்கிய உறவினரால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும். முயற்சியில் உள்ள தடைகளை நீக்க நடவடிக்கைகள் எடுப்பீர்கள். அரசியல் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நற்செய்தி உண்டு.

**துலாம்**
புதிய விஷயங்களைக் கற்றுப் பணியில் சிறப்படைவீர்கள். மனதிற்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சக பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும்.

**விருட்சிகம்**
அதிர்ஷ்டம் உண்டு. சுப நிகழ்ச்சி முயற்சிகள் வெற்றியடையும். சொத்துக்கள் தொடர்பான செயல்களில் முன்னேற்றம் உண்டு. பொருளா தாரத்தில் இருந்த பின்னடைவு தீரும். அன்பு கிடைக்கும்.

**தனுசு**
மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலருக்கு திருமணம் முடிவாகும். வேலைப்பளு காரணமாக சோர்ந்தவர்களுக்கு சம்பளம் உயரும். எதிலும் அவசரமாக முடிவெடுக்காமல் கவனம் காப்பீர்கள்.

**மகரம்**
எதிர்கால முதலீட்டு எண்ணம் சிலருக்கு உண்டாகலாம். தைரியம் கூடுவதால் நடவடிக்கை எடுத்து முன்னேறுவீர்கள். பிரச்னை ஏற்பட்டாலும் தைரியத்தை விடாமல் ஜெயிப்பீர்கள்.

**கும்பம்**
பணிக்கான முயற்சி எடுக்கும் நாள். விரோதங்கள் விலகும். பல நாளாக முனைந்து செய்த முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். தன்னம்பிக்கை கொள்ளுங்கள். செயல்களில் நேர்த்தி இருக்கும்.

**மீனம்**
வருமானம் போதுமானதாக இருக்கும். பேராசை வேண்டாம். உங்கள் துணிச்சலான செயல் மற்றவர்களால் பாராட்டப்படும். செலவாகும் என்று நினைத்த விஷயம் குறைந்த செலவில் முடியும்.

# ஸ்டாலின் தனது மகனை முதல்வராக்க துடிக்கிறார்!

## மத்திய அமைச்சர் அமித்ஷா பேச்சு!!



சென்னை, ஏப். 05

“தி.மு.க. குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுங்கள், மு. க. ஸ்டாலின் தனது மகனை முதலமைச்சராக்க துடிக்கிறார்” என்று நேற்று முன்தினம் நெல்லை பிரசார கூட்டத்தில் மத்திய அமைச்சர் அமித்ஷா பேசினார்.

சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகம் வந்துள்ள அவர் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

தமிழக சட்டமன்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் ஆகும். இந்த தேர்தலில் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும். மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் ஆட்சியை கொண்டு வர வேண்டும். இந்தத் தேர்தலில் பிரதமர் மோடி தலைமையில் ஒரு அணியாகவும், பப்பு ராகுல் தலைமையில் ஒரு அணியாகவும் நிற்கிறோம்.

காங்கிரஸ், தி.மு.க. கட்சிகள் குடும்ப ஆட்சியே நடத்தி வருகின்றனர். காங்கிரஸில் 4 ‘ஜி’க்கள் உள்ளனர். அதாவது நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி தற்போது ராகுல்காந்தி என குடும்ப வாரிசுகளாக உள்ளனர். தமிழகத்தில் தி.மு.க.வில் 3 ‘ஜி’க்கள் உள்ளனர். கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி என குடும்ப வாரிசுகள் உள்ளனர். அடுத்தபடியாக மு.க.ஸ்டாலின் தனது மகன் உதயநிதியை முதலமைச்சர் ஆக்க துடிக்கிறார். இது குடும்ப கட்சியாகவும், பணக்கார கட்சியாகவும், செல்வந்தவர்கள் கட்சியாகவும் உள்ளது. மக்கள் ஆட்சி தொடர ஆதரவு தாருங்கள் - என்றார். (ஐ)

## தமிழ்நாடு சட்ட சபை தேர்தல்: நேற்றுடன் பிரசாரம் நிறைவு!

சென்னை, ஏப். 05

தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தல் நாளை செவ்வாய்க்கிழமை நடக்கவுள்ளது. இந்நிலையில், தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நேற்று இரவு 7 மணியுடன் நிறைவுக்கு வந்தன.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 3 ஆயிரத்து 998 பேர் போட்டியிடுகின்றனர். இதில், 3 ஆயிரத்து 585 ஆண் வேட்பாளர்களும், 411 பெண் வேட்பாளர்களும், மூன்றாம் பாலினத்தவர்கள் 2 பேரும் அடங்குவார்கள்.

அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக சூறாவளி பிரசாரம் நடத்தினர். கூட்டணி கட்சி தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வந்தததை அடுத்து மதுக்கடைகளும் நேற்றுடன் மூடப்பட்டன. தேர்தல் நாள் முடியும் வரை இவை மூடப்பட்டிருக்கும். ஆனால், நேற்று முன்தினம் மட்டும் ஒரேநாளில் 160 கோடி இந்திய ரூபாவுக்கு அங்கு மது விற்பனையாகியுள்ளது என்று புள்ளிவிவர தகல்வகள் தெரிவித்தன.



## தந்தைக்காக நடனமாடி வாக்கு சேகரித்த அக்சரா!

சென்னை, ஏப். 05

தமிழகம் சட்ட சபை தேர்தலில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியும் போட்டியிடுகின்றது.

கமல் ஹாசனுக்கு ஆதவராக பல நடிகர் நடிகையரும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவரின் மகளும் நடிகையுமான அக்சரா ஹாசன் கோவையில் நேற்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்த அவர் நடனம் ஆடியும் வாக்கு சேகரித்தார். (ஐ)

# கண்ணீர்விட்டழுது வாக்கு கேட்கும் வேட்பாளர்களால் திணறும் தொகுதி!

சென்னை, ஏப். 05

தமிழ்நாடு சட்ட சபை தேர்தலில் விராலிமலை தொகுதியில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் கண்ணீர் விட்டு அழுது பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.



இந்தத் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் அமைச்சர் விஜயபாஸ்கரும், தி.மு.க. சார்பில் பழனியப்பனும் போட்டியிடுகின்றனர்.

பழனியப்பன் தேர்தல் பிரசாரத்தின்போது, ‘‘2 முறை தோற்றுவிட்டேன், விஜயபாஸ்கருக்கு அப்பா, அண்ணன் எல்லாம் இருக்காங்க. எனக்கு யாரு இருக்காங்க. நீங்கதான் என் சொந்தம். எனக்கு இது கடைசித் தேர்தல்” என்று பழனியப்பன் போகுமிடமெல்லாம் கட்சித் துண்டை வைத்து கண்களைத் துடைத்தபடி பேச மக்களும் கலங்கினர்.

இதை அறிந்த விஜயபாஸ்கர் தற்போது தாமும் அதே ஆயுதத்தை எடுத்துள்ளார். ‘‘எனக்கு நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, தலைசுற்றல், மயக்கம் உள்ளிட்ட பிரச்சனைகள் உள்ளன. காலை நேரத்தில் உணவு அருந்திவிட்டு, மதியம் ஒரு மணி நேரம் தூங்கி காலையில் உடற்பயிற்சி செய்வதற்குக்கூட முடியாமல் உழைக்கிறேன். 10 வருடங்களாக இந்தத் தொகுதி மக்களுக்காக மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து, உழைத்துக் கொண்டே இருக்கிறேன். கொரோனா காலத்தில் ஓடோடி உழைத்ததால் எனது எடை ஏழரை கிலோ குறைந்துவிட்டது” என்று அமைச்சர் விஜய்பாஸ்கர் கண்கலங்கினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**தந்தையே!**
**ஆயன் இல்லாத மந்தைகளாக**
**நாம் தனித்து விட்டாலும்**
**நீங்கள் ஏற்றி வைத்த கலைத் தீபத்தை**
**அணையவிடாது கொண்டு செல்வோம்**
**அமைதியாக இளைப்பாறுங்கள்**
**கண்ணீருடன் விடைதருகின்றோம்**
**விண்ணிலிருந்து வழிகாட்டுங்கள்.**





**'கலைத்தூது' அருட்கலாநிதி**

## நீ. மரிய சேவியர் அடிகள்

**(ஸ்தாபகர், இயக்குநர் - திருமறைக் கலாமன்றம்)**

மலர்வு: 03.12.1939 உதிர்வு: 01.04.2021

கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத்துறையில்
தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த
எமது இயக்குநர் தந்தையின் புகழுடல் இன்று காலை 10.00 மணி முதல்
யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.
இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை
6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு
யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும்.
தொடர்ந்து 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர்
மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
அதன் பின்னர் தந்தையின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா
சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இத்தகவல்களை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் மீனவர்களின் படகை மோதி உடைத்தது இந்திய படகு!

## கடலில் தத்தளித்த இருவர் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 05

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மாதகல் மீனவர்களின் படகை இந்திய இழுவைப் படகு மோதியதில் அந்தப் படகு உடைந்ததுடன், இயந்திரம் உட்பட்ட உபகரணங்களும் கடலில் மூழ்கியுள்ளன.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது:

மாதகல் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் மீன்பிடி நடவடிக்கைக்காக ஒரு படகில் நேற்று முன்தினம் சென்றிருக்கின்றனர். நேற்று காலை வரையில் அவர்கள் கரை திரும்பாத நிலையில் அவர்களைத் தேடி மாதகலைச் சேர்ந்த மீனவர்கள் சென்றிருக்கின்றனர்.

அப்போது, கடலில் வலை மிதக்கப் பயன்படுத்தப்படும் மிதவை (போயா) வை பிடித்தபடி இருவரும் தத்தளித்தபடி இருந்தனர். அவர்களை உடனடியாக மீட்ட மீனவர்கள் அவர்களிடம் கேட்டபோது,

கடந்த இரவு தாம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இந்திய இழுவைப்படகு தமது படகை மோதிச் சென்றதாகவும், அதனால் தமது படகு உடைந்து இயந்திரம் உட்பட்ட உபரணங்கள் கடலில் மூழ்கின எனவும் வலை மிதவையை பிடித்தபடி தாம் தப்பினர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ஐ)

# தவறிழைக்கும் பொலிஸார் மீது நடவடிக்கை எடுப்பது அவசியம்!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 05

தவறிழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுவது பொலிஸ் திணைக்களத்தின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையைப் பாழ்படுத்தும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கவலை கொண்டுள்ளது. எந்தவொரு சூழ்நிலையிலும் சட்ட வரையறைகளை மீறி, பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது.

பொலிஸ் அதிகாரிகளின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து, பொலிஸ் திணைக்களம் மீதான நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும். பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் கண்காணிப்பாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மன்னார் பேராலயத்தில் ஈஸ்டர் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது



மன்னார், ஏப். 05

இயேசு பிரானின் உயிர்ப்பு பெருவிழா திருப்பலி (ஈஸ்டர்) மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டனர். திருவிழா திருப்பலி இடம் பெற்ற போது ஆலயத்தை சூழ இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம் பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. (ஐ)

# மரண அறிவித்தல்



மலர்வு 27 - 11 - 1985

உதிர்வு 03 - 04 - 2021

## திரு.செபமாலை ஜெறின்சன்

(பாடசாலை கல்விசாரா ஊழியர், கச்சாய் அ.த.க.பாடசாலை, சமூக சேவகர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செபமாலை ஜெறின்சன் அவர்கள் 03.04.2021 அன்று அகால மரணம் அடைந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் திரு.திருமதி அலெக்சாண்டர் செபமாலை – மேரி கற்பலங்காரி தம்பதிகளின் நான்காவது புத்திரனும்,

தங்கக்குமாரன் முத்துக்கிளி ஆகியோரின் பாசமிகு மருமகனும், மேரிகில்டாவின் அன்புக் கணவரும், அருட்தந்தை ஜெபதாசன், சாந்தினி (நேர்வே), றெமி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இவர் நோயல் அன்ரோ, நித்தியா, வசந்தினி, றொய்சன், றொசாணி, நிசாந்தினி, றொகான், தங்கன், அன்ரனிராஜ் செபானி ஆகியோரின் மைத்து னரும், காந்தி, மலர், வீரக்கோன் ஜெயராணி, ராஜசூரியா ராஜினி, மனுவல்தாசன் வில்லிமலர், தேவதாஸன் எமல்டா, செல்வராசா சவரி யம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், இம்மனுவேல் செல்லக் குமாரத்தி, ராயப்பு ராசகுமாரத்தி, காந்திமதி ஆகியோரின் பெறா மகனும், யோன் பிறிற்றோ, எஸ்பீரியர், அருட்தந்தை பொஸ்கோ (CR), கொலம்பஸ், கலிஸ்ரர், றொனாட், சாம்சன், அருட்தந்தை நிசான், டிறோன், சுபா, தீபா, மேனகா, நிமாளினி, ஜொனி, காலஞ் சென்ற மஞ்சு, சியாமளா, றாதிகா, தாரணி, டிஸ்கோனா, யசி, கிறிஸ் ரெலா, ஜெயராணி, லியோனா, வதனா, ஜோரினி, ஆகியோரின் பாசமிகு மச்சானும், ராஜ்குமார், தயாளன், விமல், ரஞ்சித், வினோத், றெஜினோல்ட், சுரேஸ், ராஜினி, சுகந்தினி, விஜியனி, யசோ, காலஞ் சென்ற சிலோஜினி, வாணி, சுடர், பொம்மி, விமலி, தர்சினி, நெலிங்ரா, நிக்கொலின் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், ஆர்லின் ஜலின், செயான், லூட்சன், றொசான், செனாலி ஆகியோ ரின் பாசமிகு மாமனாரும், அபிசாயினி, மெலின்ரா, செலின்ரா, கெயின்ஸ், லெனோன், எபி, அன்றியா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், அன்றியா, எரோன், சைனிகா ஆகியோரின் பாசமிகு தொட் டப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்கத்துக்காக இன்று (05.04.2021) திங்கள் காலை 10.30 மணியளவில் புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**சென்மேரிஸ் வீதி,**
**நாவாந்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வடக்கு - கிழக்குக்கு அதிவெப்ப எச்சரிக்கை!

கொழும்பு, ஏப்.05

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் வெப்பநிலை ஆபத்தான அளவில் உயருமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அந்தத் திணைக்களம் நேற்று வெளியிட்ட வெப்ப குறியீட்டு ஆலோசனையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் மனித உடலில் வெப்பநிலை தீவிர எச்சரிக்கை நிலை (நுஒவசநஅந ஊயரவழைெ டநஎநட) வரை அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடும் வெப்பத்தில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாக்க திறந்த வெளிகளில் தேவையற்று நடமாடுவதை தவிர்க்கவுமாறும், அதிகளவு நீராகாரங்களை எடுக்குமாறும், வெளிர் நிறத்திலான மெல்லிய ஆடையை அணிந்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# புதையல் தோண்டிய சந்தேகத்தில் பிக்குகள் உட்பட பதினொருவர் கைது!

வவுனியா, ஏப். 05

புதையல் தோண்டிய இரு பிக்குகள் உட்பட 11 பேரை வவுனியா பூவரசன்குளம் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

வவுனியா தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளவில் புதையல் அகழப்படுகிறது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை அந்தப் பகுதிக்கு பொலிஸார் சென்றனர்.

இதன்போது, மண்ணை தோண்டிக் கொண்டிருந்த இரு பிக்குகள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து நிலத்தை அகழ்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் 2 கார்கள் மற்றும் ஒரு முச்சக்கரவண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தனித்திருந்த இளைஞன் சடலமாக நேற்று மீட்பு!

வடமராட்சி, ஏப். 05

வடமராட்சி கிழக்கில் வீட்டில் தனித்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

குடத்தனை தரவை பகுதியை சேர்ந்த முகுந்தன் சுலக்சன் (வயது 23) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். இவரின் மரணத்துக்கான காரணம் தெரிய வரவில்லை. வடமராட்சி கிழக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோர்க்கு நீதியும் - தீர்ப்பும் கிடைக்க வேண்டும்!

## மன்னார் ஆயர் வலியுறுத்து

மன்னார், ஏப். 05

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு உண்மையான நீதியும் - தீர்ப்பும் கிடைக்க வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம் செய்யப்பட்டு மீண்டும் உயிர் பெற்றர். இந்த நாளிலே நாங்கள் மகிழ்ச்சி அடைவதற்கு காரணம் இயேசு நாதர் எமக்காக உயிரையே தியாகம் செய்தார். ஆனால், அவருடைய வாழ்க்கை முடிவடைய வில்லை. அவர் அதை தாண்டி சென்று மீண்டும் உயிர் பெற்றார். அப்படியாக உயிர் பெற்று இயேசுநாதர் இன்றும் வாழ்கின்றார்.



நாங்கள் இந்த உயிர்த்த ஞாயிறு அன்று இதற்கு முன்பாக இரண்டு வருடங்களுக்கு முன்பு பாஸ்கா திருவிழா அன்று திருப்பலிக்காக சென்றிருந்த எத்தனையோ மக்கள் குண்டுவெடிப்பு காரணமாக உயிர் இழந்தார்கள். அவர்களை இன்றைய தினம் நாம் விசேடமாக நினைவு கூருவோம். அவர்களுக்கு உண்மையான நீதியும் - தீர்ப்பும் கிடைக்கப் பெற வேண்டும் என்று நாம் இறைவனிடம் மன்றாடுவோம் என்று கூறியுள்ளார். (ஐ)

# நாட்டின் எதிர்காலத்தை வெளிநாட்டு சக்திகள் தீர்மானிக்க அனுமதியோம்!

## கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ்



**கண்டி, ஏப்.05**

**நாட்டின் எதிர்காலம் குறித்து முடிவுகளை எடுக்க வெளிநாட்டு சக்திகள் அனுமதிக்கப்படாது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையால் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பொதுமக்களுக்கு சில புரிதல் இருக்க வேண்டும். இவ்வாறு கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்று ஊடகங்களிடம் பேசிய அமைச்சர்,

வெளிசக்திகளின் தலையீடுகள் முப்படையினர் மற்றும் அரச சேவைக்கு, மற்றும் பாராளுமன்றத்தின் நோக்கத்தை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. சட்டங்களை உருவாக்குதல், அரசமைப்பில் திருத்தங்கள் மற்றும் நியமனங்கள் உள்ளிட்ட நாட்டின் உள் விவகாரங்களைக் கட்டுப்படுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அனுவலகம் அனுமதிக்கப்பட வேண்டுமா என்று கேள்வி எழுப்பினார்.

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, எதிர்காலத்தில் மனித உரிமைகள் மீறல் நடக்கும் என்று மனித உரிமைகள் பேரவை நம்புகிறது. முப்படைகளை வேட்டையாடுவதற்கும், சர்வதேச நீதிமன்றங்களுக்கு முன்பாக 28 இலட்சம் டொலர்களைச் செலவழிப்பதற்கும் ஒரு தீய திட்டம் நடந்து வருகிறது.

இலங்கையைப் பயன்படுத்துவதன் மூலம் வெளிநாடுகள் தங்கள் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக கட்சி வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து பிரிவுகளும் ஒன்றுபட வேண்டும் - என்றார். (ஐ)

# தேவாலயத்துக்குள் செல்ல முயன்ற இருவர் நேற்று கைது

கொழும்பு, ஏப். 05

உயிர்த்த ஞாயிறுத் தினமான நேற்று தேவாலயத்துக்குள் செல்ல முயன்ற இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

?களுத்துறை-ஹொரணை கல் எதுகொட சென். பொரஸ்ட் தேவாலயத்துக்குள் அத்துமீறி நுழைவதற்கு முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இதையடுத்து அந்தப் பகுதிகளில் உள்ள ஏனைய தேவாலயங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தேவாலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றவேளையில், மோட்டார் சைக்கிளில் வந்த இவ்விருவரும், தேவாலயத்துக்குள் நுழையும் வீதியின் ஊடாக செல்வதற்கு முயன்றுள்ளனர். இதன்போதே, அங்கு கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை கைது செய்தனர். இதையடுத்து அந்த தேவாலயத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கைதான இருவரிடமும் தேசிய அடையாள அட்டைகள் இல்லை எனவும், இவர்கள் மன்னார், ஹற்றனை சேர்ந்த 31, 61 வயது நபர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் ஒலித்தவர் ஆயர் யோசப்!

## வடக்கு அவைத் தலைவர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 05

"இந்த நாட்டு அரசாங்கத்தின் அசுர பலத்துக்கும் அடக்குமுறைகளுக்கும் அஞ்சாமல் ஓங்கி ஒலித்த குரல், யுத்தத்தின் முடிவின் போது ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேலான எமது மக்கள் கொல்லப்பட்டனர் என்று நாட்டுக்கும் உலகுக்கும் உரத்துச் சொன்ன குரல் ஓய்வெடுக்கிறது." என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பின் மறைவுக்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், "ஆயர் யாழ்ப்பாணத்து புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றிய பொழுது நான் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளராகவிருந்து அவருடன் நெருங்கிப் பழகி ஆலோசனைகளையும் ஆசிகளையும் வழிகாட்டல்களையும் பெறும் வாய்ப்பைப் பெற்றமையை இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கொள்கின்றேன். என்னை எங்கு சந்தித்தாலும் அன்புரிமையுடன் பெயர் சொல்லி அழைத்து ஆலோசனைகளை வழங்கியமையை நினைவுக்கு வருகின்றது.

"அமரத்துவம் பெற்ற ஆயர், நெடுந்தீவு மண் தமிழினத்துக்கு வழங்கிய தனிநாயகம் அடிகளாரைப் போன்று தமிழர்களின் மத வேறுபாடுகளைக் கடந்து, அவர்கள் ஒரே இனம் என்ற கோணத்தில் எப்பொழுதெல்லாம் தமிழ் இனம் இன்னல்களுக்கு உட்பட்டதோ அப்பொழுதெல்லாம் ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதி கொள்ளப் போகின்றது. தமது வெற்றிடம் இனி நிரப்பமுடியாதது என்ற நிலையை உருவாக்கிவிட்டே இந்த புனித ஆன்மா அமைதியாக உறங்கப் போகின்றது.

"புனிதமான சமயத் தொண்டையும் தமிழ் இனத்தின் கலை, கலாசார மொழி மற்றும் பண்பாட்டு விழுமியங்களுக்காக போராடிய ஆயர் ராயப்பு யோசப் அர்கள் எமது சமகால வாழ்வியலின் வரலாறாக தமிழ் கூறும் நல்லுலகில் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.", என்றுள்ளது. (ஐ)

# வடக்கு - கிழக்கில் போர் காலத்தில் ஆயர் அளப்பரிய பணியாற்றினார்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் இரங்கல்

கொழும்பு, ஏப். 05

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மோதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் மறைந்த ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நெருங்கிய வகையில் தொடர்புபட்டு ஆற்றிய அளப்பரிய பணிகளை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் அதி வண. இராயப்பு யோசப் ஆண்டகையின் மறைவையடுத்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இத்துயர செய்தியை கேள்வியுற்ற நான் எனது ஆழ்ந்த அனுதாபங்களை மன்னார் மறை மாவட்டத்தின் குருக்கள், துறவியர், பொதுநிலையினர், ஆண்டகையின் உறவினர்கள், நெருங்கிய நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மோதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் ஆண்டகை நெருங்கிய வகையில் தொடர்புபட்டு ஆற்றிய அளப்பரிய பணிகளை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன். எமது இலங்கைத்திரு நாட்டில் இனங்களுக்கு இடையிலான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பவும் மதங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை வளர்த்தெடுக்கவும் பெரும் பங்களிப்பை ஆயர் இராயப்பு யோசப் நல்கியுள்ளார்.

மேலும் அவர் பேச்சுக்களின் வழியாக நிலையான அமைதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.



எனினும், எதிர்பாராதவிதமாக மக்கள் பிரதிநிதிகளுக் கிடையே மேற்படி கருத்தாடல்கள் முழுமையான வெற்றியை அளிக்கவில்லை. எவ்வாறெனினும் அவரது இடைவிடாத முயற்சியும் அமைதிக்கான வழிகாட்டுதலும் பல்லின, பல சமய பண்பாட்டுமயமாக்கல் நல்லுறவுக்கும் ஆற்றிய பணியை நான் நினைவு கூறுகின்றேன். இறைவன் அவர் ஆன்மாவுக்கு நித்திய இளைபாற்றியை அருள் வாராக - என்றுள்ளது. (ஐ)

# புத்தூர் கொலை சந்தேகநபர்கள் தமிழகத்தில் நேற்று கைதாகினர்!

சென்னை, ஏப். 05

தமிழகத்தில் நேற்று கைதான இரண்டு இளைஞர்களும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

நேற்று தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு கண்ணாடிஇழை படகுமூலம் சென்ற இரண்டு இளைஞர்கள், சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் பிரதாப், நாகேஸ் என தம்மை கூறியதுடன், மன்னார், அடம்பன் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் கூறியுள்ளனர். மன்னாரிலிருந்து அவர்கள் சட்டவிரோதமாக தப்பி சென்றிருந்தனர்.

ஆனால், அவர்களின் படங்கள் வெளியானமையை தொடர்ந்து அவர்கள் புத்தூர் வீரவாணியை சேர்ந்த யோகநாதன் பிரதாபன், விஜயராசா நாகேஸ்வரன் என்று தெரிய வந்துள்ளது. இவர்களில் யோகநாதன் பிரதாபன் கடந்த 28ஆம் திகதி தனிமையில் இருந்த முதியவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பா.ஜ.க எதிர் தி.மு.க!



விக்னேஷ். அ - பிபிசி தமிழ்

தமிழ்நாட்டில் 1984 சட்டமன்றத் தேர்தலில் இருந்து ஒவ்வொரு தேர்தல்களிலும் திமுக - அதிமுக ஆகிய இரு கட்சிகளும் மாறிமாறி ஆட்சியைப் பிடித்த நிலை 2016ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் மாறியது.

மிகவும் நெருக்கமாக இருந்த போட்டியில் 2011ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் வென்று ஆட்சியில் இருந்த ஜெயலலிதா தலைமையிலான அதிமுக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

1984 சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு ஆளும் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது தமிழகத்தில் அதுதான் முதல் முறை.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் மாற்றாக தங்களை அறிவித்துக் கொண்ட, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய மக்கள் நலக் கூட்டணி, விஜயகாந்தின் தே.மு.தி.க. மற்றும் ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து, விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக அறிவித்து தேர்தலில் களம் கண்டன.

மூன்றாவது அணி ஒன்று அமைந்ததால் ஆளும் கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறி தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்ததாக சில அரசியல் நோக்கர்கள் அப்போது கூறினார்கள்.

தி.மு.க. ஆட்சியைப் பிடிக்க முடியாமல் போனதற்கு கூறப்பட்ட இன்னொரு முக்கியமான காரணம் கொங்கு மண்டலம் என்று பரவலாக அறியப்பட்ட தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் அதிமுக மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றது.

சென்னை மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகள், தேமுதிக மற்றும் மக்கள் நலக் கூட்டணியின் விடுதலை சிறுத்தைகள் கட்சி கணிசமான ஆதரவைக் கொண்டுள்ள வட மாவட்டங்கள், தென் மாவட்டங் கள், இடதுசாரிகள் ஓரளவு வாக்கு வங்கியைக் கொண்டுள்ள டெல்டா மாவட்டங்கள் ஆகிய பகுதிகளில் அதிமுகவிற்கு நிகராகவோ, அதிமுகவை விட அதிகமாகவோ தொகுதி களில் வென்றது திமுக. ஆனால் 'கொங்கு மண்டலம்' என்று அறியப்படும், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், கரூர் ஆகிய மாவட்டங்களில் மிகக் குறைந்த அளவே வெற்றி பெற்றது தி.மு.க.

இந்த முறை கொங்கு மண்டலத்தில் நிலவரம் என்ன? பெரும்பாலான கருத்துக்கணிப்புகளில் ஆட்சி அமைக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படும் திமுக இந்தப் பகுதியில் இனிவரும் ஆண்டுகளில் காலூன்ற வாய்ப்புள்ளதா என்று பார்க்கலாம்.

மேற்கு தமிழகத்தில் வன்னியர்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்கள் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவை. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் அதிமுக கூட்டணியில் பா.ஜ.க. எப்படி வாக்கு வங்கியைக் கொண்டுள்ளது என்று கருதப்படுகிறதோ, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் பாட்டாளி மக்கள் கட்சி தனக்கென ஒரு வாக்கு வங்கியைக் கொண்டுள்ளது என்று கருதப்படுகிறது.

வன்னியர்களுக்கு வழங்கப்பட்ட 10.5% இட ஒதுக்கீடு தொடரும் என்று அ.தி.மு.க. தரப்பும், அது தேர்தல் கால அறிவிப்பு மட்டுமே என்று தி.மு.க. தரப்பும் இப்பகுதியில் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றன.

அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ம.கவுக்கும், தி.மு.க. கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் மேற்குத் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைப்பு ரீதியான பலம் அதிகமாக உள்ளது.

பாரதிய ஜனதா கட்சி சார்பில் மேற்கொள்ளப்படும் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பரப்புரைகளில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியின் தாராபுரம் வருகை, உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தின் கோயம்புத்தூர் வருகை ஆகியவை இந்த தேர்தல் நேரத்தில் மிகவும் கவனம் பெற்ற பரப்புரைகளாக உள்ளன.

மைய நீரோட்ட ஊடகங்கள் மட்டுமல்லாது சமூக ஊடகங்களிலும் ஆதரவாகவும், எதிராகவும் கடும் விவாதத்துக்கு உள்ளானவை இவை.



கொங்கு மண்டலத்தில் உள்ள இந்த சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடந்த இந்த நிகழ்வுகள் அதீத கவனம் பெறக் காரணம், தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முக்கியக் கட்சியாக இருக்கும் அ.தி.மு.க. செய்வதைவிடவும், பாஜக எதிர்ப்பை முன்வைத்து திமுக தலைமையிலான கூட்டணி மாநிலம் முழுவதும் பரப்புரை செய்வதுதான்.

தமிழ்நாடு பா.ஜ.கவின் முக்கிய முகங்களான எல். முருகன், வானதி சீனிவாசன், அண்ணாமலை ஆகியோர் கொங்கு மணடலத்தில் களம் இறங்குகின்றனர்.

அ.தி.மு.கவை பொறுத்தவரை முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி, அமைச்சரவையில் செல்வாக்கு மிக்கவராகக் கருதப்படும் எஸ்.பி. வேலுமணி உள்ளிட்டோர் கொங்கு மண்டலத்தில் உள்ள தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

கடந்த காலங்களைப் போல அரசியல் கட்சிகளுக்கு இடையிலான போட்டியாக மட்டுமல்லாது கொள்கைளுக்கு இடையிலான மோதலாக இந்தத் தேர்தல் உள்ளது.

தமிழ்நாட்டின் பிற பகுதிகள் அளவுக்கு தி.மு.க .வலுவாக இல்லாத இடமாகப் பார்க்கப்படும் கொங்கு மண்டலத்தில் இதன் எதிரொலி அதிகமாகவே காணப்படுகிறது. கோயம்புத்தூர் நகரத்தில் கூட கடந்த பத்து ஆண்டுகளுக்குள் தான் அ.தி.மு.கவும் தனது கட்டமைப்பை வலுவாகியுள்ளது.

## சாதிகளும் வாக்கு வங்கியும்

கொங்கு மண்டத்தின் கணிசமான எண்ணிக்கையில் வாழும் கொங்கு வேளாள கவுண்டர்கள் 1975க்கு முன் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இல்லை.

திமுகவைச் சேர்ந்த அப்போதைய வெள்ள கோவில் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் 'மிசா' சாமிநாதன், காங்கயம் தொகுதியின் கோவை செழியன், காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த கரூர் சட்டமன்ற உறுப்பினர் டி.எம். நல்லசாமி உள்ளிட்டவர்களின் முயற்சிகளால் 1975இல் அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி கொங்கு வேளாளக் கவுண்டர்களை பிற்படுத்தப்பட் டோர் பட்டியலில் இணைத்தார்.



இதே ஆட்சிக் காலத்தில் 25% ஆக இருந்த பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை 31% ஆக்கியது தி.மு.க .அரசு.நில உடைமைச் சமூகமாக, பெரும்பாலும் வேளாண்மையை மட்டுமே நம்பியிருந்த கவுண்டர்கள் பெரும் எண்ணிக்கையில் அரசுப் பணிகள் பெற வும், தொழில் தொடங்கவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது, இட ஒதுக்கீட்டு விகிதம் உயர்த்தப்பட்டது ஆகியவை உதவின.

ஆனால், இது தி.மு.கவுக்கு பெரும் வாக்கு வங்கியாக கொங்கு வேளாளர்கள் மாற உதவவில்லை. 1977இல் எம்.ஜி. ராமச்சந்திரன் முதல்வர் ஆன பிறகு பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு 50% ஆக உயர்த்தப்பட்டது.

1980களில் பொருளாதாரப் பலன்கள், கட்சியில் கிடைத்த செல்வாக்கு, தேர்தலில் நிற்கும் வாய்ப்பு ஆகியவற்றால் அதிமுகவின் வாக்கு வங்கியாக கொங்கு வேளாளர்கள் உருவாகினார். இது 1980களுக்கு பிறகு, 1996 தேர்தலைத் தவிர, கடந்த தேர்தல் வரை தி.மு.கவுக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

## சாதி, மத ரீதியிலான அணி திரட்டல்களின் தாக்கம் எப்படி உள்ளது?

சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங் களின் கணிசமான இடங்களிலும், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலும் வன்னியர்களின் மக்கள் தொகை கணிசமாக உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வன்னியர் களை சேர்த்து அப்போதைய முதல்வர் கருணா நிதி அறிவிப்பதற்கு முன்னரே வன்னியர்கள் பரவலாக வாழும் மாவட்டங்களில், அ.தி.மு.கவை விடவும் தி.மு.க செல்வாக்கு பெற்ற கட்சியாக இருந்தது.

அதன்பின்னர் பாட்டாளி மக்கள் கட்சி தன்னை வன்னியர்களுக்கான கட்சியாகக் காட்டிக்கொண்டாலும், தி.மு.க. ஒப்பீட்டளவில் அப்பகுதிகளில் செல்வாக்கு குறையாமலே இருந்தது.

தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் தமிழக முதல்வர் எடப்பாடி பழனி சாமி 20% இட ஒதுக்கீடு பெற்றுள்ள மிகவும் பிறப்படுத்தப்பட்டோர் பிரிவில் வன்னியர்களுக்கு 10.5%, சீர்மரபின ருக்கு 7% மற்றும் அப்பட்டியலில் எஞ்சியுள்ள சாதிகளுக்கு 2.5% இட ஒதுக்கீடு வழங்கப்படுவதாக அறிவித்தார்.

அடுத்த நாளே வன்னியர்களைத் தனது பெரும்பான்மை வாக்கு வங்கியாகக் கொண்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சியுடன் அ.தி.மு.கவின் தேர்தல் கூட்டணி உறுதியானது.

இது தேர்தல் நேர நாடகம் என்றும் இதனால் வன்னியர்கள் ஏற்கனவே 10.5%க்கும் அதிகமான பலனையே பெற்று வருவதாகவும் கூறுகிறது திமுக அணி.

இந்த இட ஒதுக்கீடு ஆறு மாத காலத்துக்கு மட்டுமானது தான் என்று துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சமீபத்தில் பேசியது பாமக தரப்புக்கு கடும் அதிருப்தியை உண்டாகியுள்ளது. ஆனால், தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட் டத்தின் வடக்குப் பகுதிகளில் உள்ள தொகுதிகள் ஆகியவற்றில் அ.தி.மு.க. கூட்டணி பெறும் வாக்குகளுக்கு இது ஒரு முக்கியக் காரணியாக இருக்கும் என்கிறார் இந்தப் பகுதிகள் குறித்து நன்கு பரிச்சயமான மூத்த ஊடக வியலாளர் சிவசுப்பிரமணியன்.

## வளமான பகுதிகள் - வளர்ச்சியில் இடைவெளி

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மேற்கு மாவட்டங்கள் வடதமிழ்நாடு, கொங்கு மண்டலம் ஆகிய இரண்டுக்குமான தன்மைகளை உடையவை.

இந்த மாவட்டங்களில் இவற்றை அண்மித்துள்ள மாவட்டங்களைப் போல தொழில் வளர்ச்சி இல்லாவிட்டாலும், இவற்றின் புவியியல் அமைப்பு தொழில் வளர்ச்சி இல்லாத குறையை ஓரளவு ஈடுகட்டும் வகையில் உள்ளது.

பெங்களூர், சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்கு தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் இருந்து வேலைவாய்ப்புக்காக செல்வது இந்த மாவட்ட மக்களுக்கு பேருதவியாக இருந்தாலும், இந்த இரு மாவட்டங்களுக்கென்று தனியாக சொல்லிக்கொள்ளும் படியான தொழில் துறை இல்லாதது ஒரு பெரும் குறைதான்.

வேளாண் பொருளாதாரத்தையே தமக்கானதாகக் கொண்டிருக்கும் இந்த மாவட்டங்கள் மாநில எல்லையில் இருப்பதால் தேசிய மாற்றும் மாநில நெடுஞ்சாலைகள் ஒப்பீட்டளவில் நன்றாகவே உள்ளன. இவற்றின் இப்போதைய தேவை இங்கு இருந்து அண்டை மாவட்டங்களுக்கும், மாநிலத்துக்கும் செல்லும் மனித வளத்தை பயன்படுத்திக் கொள்ளும் தொழில் நிறுவனங்கள்தான்.

பின்தங்கிய பகுதிகளாக இருக்கும் இந்த மாவட்டங்களில் சமீப ஆண்டுகளில் உயர் கல்வி உள்கட்டமைப்பு மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது. சுற்றியுள்ள பகுதிகளுக்கும் தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளுக்கும் வளர்ச்சியில் பெரும் இடைவெளி உள்ளது.

கல்வியில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும் இந்த இடைவெளி, தொழில் வளர்ச்சியில் இன்னும் தொடர்ந்து வருகிறது.

கடந்த காலங்களைப் போல் அல்லாமல் இந்த முறை தி.மு.க. - அ.தி.மு.க. அணிகளிடையே மிகவும் நெருக்கமான போட்டி நிறைந்த இடங்களாகவே இந்த ஒன்பது மாவட்டங்களும் இருக்க அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

சமீபத்தில் வெளியான சில கருத்துக்கணிப்புகள் தென் மாவட்டங்கள், வட மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, கொங்கு மண்டலத்தில் இருக்கும் பல சட்டப்பேரவைத் தொகுதிகளில் தி.மு.க., அ.தி.மு.க. அணிகளுக்கு இடையே இருக்கும் வாக்கு இடைவெளி குறைவாக இருப்பதையே காட்டுகின்றன.

கடந்த மக்களவைத் தேர்தலில் மாநிலத்தின் பிற பகுதிகளைப் போலவே, கொங்கு மண்டலத்திலும் அ.தி.மு.க. அணியைவிட கூடுதல் வாக்குகளைப் பெற்றது தி.மு.க.

ஒவ்வொரு பாராளுமன்ற மாக்களவைத் தொகுதிக்கும் உள்பட்ட சட்டமன்றத் தொகுதிகள் அடிப்படையில் அந்த வாக்குகளைப் பகுத்தாலும், தி.மு.க. பெரும்பான்மையான தொகுதிகளில் கூடுதல் வாக்குகளையே பெற்றது.

அது இந்தத் தேர்தலிலும் தொடருமா என்பதைத் தெரிந்து கொள்ள மே 2ஆம் தேதி வரை காத்திருக்கவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தோ பசுபிக் பிராந்திய பூகோள அரசியலில் தமிழர்களின் நலன்கள்

கணநாதன்

இன்று தமிழ் மக்கள் உருவாகி வரும் புதியதோர் பல்துருவ உலக ஒழுங்கில் அரசற்ற தேச மக்களாக தமது வகிபாகத்தை கொண்டுள்ளார்கள். காலனித்துவ காலம் தொடக்கம் இன்று வரை தமது இழந்துவிட்ட இறைமையை வேண்டி நிற்கும் மக்களாகவும், இன அழிப்புக்கான நீதியைக் கோரி நிற்கும் மக்களாகவும் தமது அரசியற் செயற்பாடுகளை தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

ஆயுதப்போராட்டம் முடிவுற்ற 2009ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் அவர்களது அரசியற் செயற்பாடுகள் பெரிதும் மேற்குலகையும், அல்லது இந்தியாவையும், ஐக்கிய நாடுகளையும் மையப்படுத்தியதாக அமைந்துள்ளன. சர்வதேச உறவுகளில் நிரந்தரமான நட்பு சக்திகளோ அல்லது எதிர்ப்புசக்திகளோ இன்றி தனியே தேச அரசுகளின் நலன்களே நிரந்தரமாகவுள்ள ஓர் ஒழுங்கமைப்பில் வாழ்கிறோம். இங்கு தமிழ் மக்கள் ஓர் அரசற்ற தேசமாக எவ்வாறு தமது அடிப்படை அரசியல் நலன்களான சுயநிர்ணய உரிமை, தாயகம், தேசியம் ஆகிய உறுதியான தொடர்ச்சியான நலன்களை முன்னெடுக்கும் மொழியாலும் பண்பாட்டாலும் இன அடையாளத்தாலும் ஒன்றுபட்டு நிற்கும் அரசுகளைக் கடந்து உலகெங்கும் வாழும் ஓர் தேச மக்களாக சர்வதேச உறவுகளில் தமது காத்திரமான வகிபாகத்தை வரையறுத்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பது முக்கியமானது.

அரசுகள் தொடக்கம் அவர்களுடைய நலன்களை மையமாகக் கொண்டியங்கும் ஐ.நா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வரை பல்வேறு வகையான சர்வதேச அமைப்புகளுடனும் தமது அரசியல் நலன்களை மையமாகக் கொண்டு அரசியற் செயற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்ற தெளிவான நிலைப்பாடும் இன்றியமையாதது. ஓர் தேச மக்களாக ஒன்றுபட்டு நின்று தெளிவான அரசியல் நலன்கள் சார்ந்த நிலைப்பாடுகளும், உறுதியான வகிபாகமும் மூலோபாயச் சிந்தனையும் இன்றி செயற்படுவதானது, அரசுகளாலும் அவர்கள் சார்ந்த அமைப்புகளாலும் அவர்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் வெறும் சதுரங்கக் காய்களாக அகப்பட்டு தொடர்ச்சியாக தமது இறைமையையும் அடையாளத்தையும் இழக்கும் மக்களாக இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இவ்வாறானதோர் புறச்சூழலில் வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட்டு நிற்கும் ஓர் தேச மக்களாக தமக்கான ஓர் உறுதியான வலுவான வகிபாகத்தையும் மூலோபாயச் சிந்தனைப் பாரம்பரியத்தையும் உருவாக்கிக் கொள்வதும், பேணி வளர்ப்பதும் தம்மைத் தனித்துவமான வலுவான தேச மக்களாக சர்வதேச உறவுகளில் தக்கவைத்துக் கொள்வதற்கு அவசியமானவை.

இவ்வாறு ஓர் வலுவான சக்தியாக தமது நலன்களின் அடிப்படையில் அரசுகளுடனான உறவுகளை வகுத்துக் கொள்வதற்கும், அவர்களின் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கும், தெளிவாக தமக்கானதோர் நிலைப்பாட்டை எடுப்பதற்கும் பின்வரும் காரணிகள் முக்கியமானவை:

இன்றைய சர்வதேச மூலோபாயப் போக்குகள் (strategic trends),

உருவாகி வரும் புதிய பல்துருவ உலக ஒழுங்கு (multi polar world order),

இந்தோ பசுபிக் பிராந்தியத்தின் பூகோள அரசியற் போக்குகள் (Indo Pacific geopolitical competition),

அவற்றை சரியான முறையில் விளங்கிக் கொள்வதற்கான சர்வதேச உறவுகளின் சிந்தனைக் கோட்பாடுகள் (International Relations theories).

சர்வதேச உறவுகள் குறித்து மேற்கூறிய சர்வதேசச் சூழலை விளங்கிக் கொள்வதற்கான ஓர் முயற்சியாக இக்கட்டுரைத் தொடர்கள் அமைகின்றன.

புதிய சர்வதேச அரசியற் சூழல்

இன்றைய சர்வதேச அரசியற் சூழலைப் பற்றி ஆராய முன்னர் கீழ்வரும் கேள்விகளை நாம் முதலில் எமது ஆய்வின் மையமாகக் கொண்டிருப்பது பயனுள்ளது.

சர்வதேச உறவுகளில் தேசிய அரசுகள் மற்றும் பிற முக்கியமான வலுவான செயற்பாட்டாளர்களும் ஏன் வெவ்வேறு சூழ்நிலைகளில் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்?

அவர்களுடைய இந்த நடத்தையை நாம் எவ்வாறு விளக்கி, எதிர்கால நடத்தைகளை எதிர்வு கூறுவதற்கு அவற்றைப் பயன்படுத்த முடியும்?

**சர்வதேச அமைப்பின் சமகாலப் பண்புகள் எவை?,**

அவை அந்த அமைப்பில் உள்ள செயற்பாட்டாளர்களை எவ்வாறு பாதிக்கின்றன?

சர்வதேச அமைப்பில் நடந்து வரும் புவிசார் அரசியல், பொருளாதார, இராணுவ மற்றும் தொழில்நுட்ப போக்குகள் யாவை?

அந்த போக்குகள் அந்த செயற்பாட்டாளர்களிடையேயான தொடர்புகளை எவ்வாறு பாதிக்கின்றன?

ஒரு மூலோபாயச் சிந்தனைப் போக்குடைய தேசமாக சர்வதேச உறவுகளையும் அதன் கட்டமைப்பையும் புரிந்துகொள்ள நாம் கேட்க வேண்டிய கேள்விகளாக இவை உள்ளன.

இக்கேள்விகளை மனதிலிருத்தி தற்போதுள்ள சர்வதேச சூழலில் ஆசியாவை மையப்படுத்தி உருவாகிவரும் சர்வதேச போக்கினையும், அதன் தொடர்ச்சியாக இந்தோ பசுபிக் பிராந்திய பூகோள அரசியற் போட்டிகளையும் அவதானிக்க முற்படுவோம்.

இன்று நாம் உலகளாவிய ரீதியில் ஆசியாவின் எழுச்சி என்ற ஓர் பாரிய மாற்றத்தை (tectonic shift) அவதானிக்க முடிகிறது. 19 ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவும், 20 ஆம் நூற்றாண்டு அமெரிக்காவும் ஆதிக்கம் செலுத்தியிருக்க 21 ஆம் நூற்றாண்டு இப்போது ஆசியாவிற்கானதாக மாறியுள்ளது என பூகோள மூலோபாயச் சிந்தனையாளர் பராக் கண்ணா (Parag Khanna) அவர்கள் தனது The Future is Asianஎன்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

ஆசியா மேற்கத்திய மேலாதிக்கத்தின் சகாப்தத்திற்கு முன்பு, ஆசியா ஐரோப்பிய காலனித்துவத்திற்கும் அமெரிக்க ஆதிக்கத்திற்கும் நீண்ட காலத்திற்கு முன்பே செழித்து வளர்ந்த தனது வணிக மற்றும் கலாச்சார பரிமாற்ற முறைகளுக்குத் திரும்புகிறது என அவர் குறிப்பிடுகிறார். உலகமயமாக்கலின் இந்த புதிய கட்டத்தில் அமெரிக்கா ஓரங்கட்டப்பட்டாலும், ஆசியாவின் வளர்ச்சிப் போக்கானது உலகப் பொருளாதாரத்தை மாற்றியமைத்துள்ளது.

சீனா தனது Belt and Road (BRI)என்ற பெரும் வணிக போக்குவரத்துகளுக்கான தரை மற்றும் கடல் ஊடாக பெரும் கட்டுமான முன்முயற்சி மூலம் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் மத்தியில் இராணுவ, தொழிநுட்ப மற்றும் பொருளாதார முனைகளில் முன்னிலை வகிக்க தொடங்கியுள்ளது. ஒரு பரந்த ஆசிய அமைப்பில் சீனா ஒரு முக்கிய சக்தியாக ஆசிய கண்டத்தின் ஒரு எழுச்சியாக உலக அரங்கில் தோற்றம் பெற்றுள்ளது.

சுமார் 500 ஆண்டுகளாக, காலனித்துவமும் பனிப்போரும் ஆசியாவை பிளவுபடுத்தி அதனை வலுவிழக்கச் செய்திருந்தன. ஆனால் இப்போது இந்த ஆசியக் கண்ட அமைப்பு (Asian System) மீண்டும் வலுவான சக்தியாக உருவாகியுள்ளது. இந்த மாபெரும் ஆசிய அமைப்பின் மறு பிறப்பானது சீனாவைச் சுற்றி மட்டும் மையம் கொள்ளாது முழுமையான ஆசியா எனும் பிராந்தியத்தின் எழுச்சியாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். எனினும் சீனா நிச்சயமாக இந்த அமைப்பின் மிக முக்கியமான சக்திகளில் ஒன்றாகவுள்ளதுடன் முன்னிலையிலுக்கும் ஐக்கிய அமெரிக்காவுடன் வலுச் சமநிலையை பாதிக்குமளவிற்கு வளர்ந்துவிட்டது. ஐக்கிய அமெரிக்கா சீனாவை வெளிப்படையாகவே தனது சமநிலை போட்டியாளராக (peer competitor) குறிப்பிட்டுள்ளது.

மக்கள்தொகை அடிப்படையில் பார்க்கும் போது. உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் ஆசியாவில் வாழ்கின்றனர். பொருளாதாரத்தின் அடிப்படையில் சக்தியை அளவிட்டால், ஆசியாவின் பொருளாதார அமைப்பு ஏற்கனவே ஐரோப்பிய அல்லது வட அமெரிக்க அமைப்புகளை விட பெரியதாக மாற்றம் பெற்றுள்ளது. எனினும் இது எழுச்சி மற்றும் வீழ்ச்சி அன்றி ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான ஒரு துருவ தாராளவாத உலக ஒழுங்கு மாற்றம் பெற்று பல துருவ ஒழுங்காக மாற்றம் பெற்றுள்ளது. இதில் சீனா மற்றும் இந்தியா முக்கிய சக்திகளாக உள்ளன.

இவ்வாறானதோர் சூழலில் அமெரிக்கா ஆசியாவில் குறிப்பாக இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார ரீதியாக, இராஜதந்திர மற்றும் இராணுவ ரீதியாக தனது செல்வாக்கை மீள நிலைநிறுத்தும் பொருட்டு மூலோபாய ஆசிய மையக் கொள்கையை 2014இல் அறிவித்திருந்தது. இம் மூலோபாய வகுப்பின் முன்னோடியாகவிருந்த முரசவ ஊயஅிடிநடட இன்று மீளவும் புதிய அமெரிக்க பைடன் அரசில் ஆசியாவிற்கான தலைமை கொள்கை வகுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2016 இல் The Pivot: The Future of American Statecraft in Asia எனும் தன்னுடைய நூலில் அமெரிக்காவின் மூலோபாய ஆசிய மையக் கொள்கையை வெளிப்படுத்தியிருந்தார். இதனையொட்டியே அமெரிக்காவின் தற்போதுள்ள இந்தோபசுபிக் பிராந்திய மூலோபாயம் (US Indo Pacific Strategy) அமைந்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**33**

**2015 - 38,39**


38. 

| 52 | 84 |
|---|---|
| ........ | ........ |

பெட்டியில் உள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் மூன்று மடங்காக உள்ளது. அந்நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை 200 ஆகும். வெற்றிடங்களில் இருக்க வேண்டிய எண்கள் யாவை?

(1) 16, 48 (2) 18, 54 (3) 19,57

39.





தரப்பட்டுள்ள உருக்களில் உள்ள எண் கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.

(1) 12 (2) 60 (3) 72


**2016 - 25,37**

25. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 9 (2) 6 (3) 4


37. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகின்றது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக மறுபடியும் தயார் செய்யும் போது எதிர் முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம்.அத் தொடர்புக்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.




(1) 22 (2) 21 (3) 20

**2017 - 11**

(11) பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.





(1) 3
(2) 4
(3) 5


**2020 - 12,18**

(12) 966, 999, 39765 ஆகிய எண்களை இடமிருந்து வலமாகவும் 389, 796 ஆகிய எண்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் நான்காவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?

(1) 59 (2) 66 (3) 69



18.




இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் எது?

(1) 14 (2) 15 (3) 16

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

## உலக சுகாதார ஸ்தாபனம்

# அங்கீகாரம் இல்லாத தடுப்பூசி பாவனை ஒழுங்கற்ற செயல்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடிதம்

கொழும்பு, ஏப்.05

**உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத தடுப்பூசியை எமது பிரஜைகளுக்கு வழங்குவது ஒழுங்கற்ற செயல்பாடாகும் என்று இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு அந்தச் சங்கம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களுக்குக்கூட உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்படாத ஒரு தடுப்பூசியை எமது நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வழங்குவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது ஒழுங்கற்ற செயல் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அனுமதியின்றி எந்தவொரு தடுப்பூசியையும் நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டாம் எனவும் அந்தச் சங்கம் சுகாதார அமைச்சை வலியுறுத்தியுள்ளது. (எ)

# மாகாண சபைகளை முற்றிலுமாக நாம் மறந்து செயல்பட முடியாது

மினுவாங்கொடை,ஏப்.05

மாகாண சபைகள் முறைமை அரசமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே, மாகாண சபைகளை முற்றிலுமாக மறந்து ஏனைய தேர்தலை நடத்த முடியாது என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர், அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தீர்மானமின்றி நிறைவடைந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மினுவாங்கொடை நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்த கொண்ட அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது முதலாவது கலந்துரையாடல், மாதாந்தம் ஒன்று கூடி கலந்துரையாடினால் சிறந்தது என அவர்கள் கூறினார்கள். முதலாவது கலந்துரையாடலில் எவ்வித தீர்மானத்துக்கும் வரமுடியவில்லை. நாம் அமைத்த கூட்டணியைப் பாதுகாத்து கொள்வதே எமது இந்த முயற்சியின்நோக்கம்.அதேவேளை, மாகாண சபைகள் முறைமை நமது நாட்டின் அரசமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே, மாகாண சபைகளை முற்றிலுமாக மறந்து ஏனைய தேர்தலை நடத்த முடியாது- என்றார். (எ)

# போக்குவரத்து குறித்து 8957 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, ஏப்.05



மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விஷேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய 8,957 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி ஏற்படும் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக விஷேட சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையானது சனிக்கிழமை வரை இடம்பெற்றிருந்தது.

இதற்கமைய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் 8,957 குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தியதாக 264 பேரும், மிக வேகமாக மோட்டார் சைக்கிள்களை ஓட்டியதாக 85 பேரும், அதிகூடிய வேகத்தில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டியதாக 80 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைக்கவசம் அணியாமல் இருந்ததாக 1298 பேரும், வீதி ஒழுங்கு விதிகளை முறையாகப் பேணாமை தொடர்பில் 2002 பேரும், அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் 875 பேரும், வேறுவகையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 4105 பேரும், மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று பேர் பயணித்தமை தொடர்பில் 248 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்புக்களின் போது, போக்குவரத்துக்குப் பொருத்தமற்ற 295 மோட்டார் சைக்கிள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர். மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாவதைத் தடுக்கும் நோக்கத்திலேயே, இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, பொலிஸாரின் இந்த சோதனை நடவடிக்கைகளுக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று எதிர்பார்க் கின்றோம் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோரின் உறவினருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசு தயார்

## ஆனால், அலுவலகம் தேவையில்லை - கெஹலிய

கண்டி,ஏப்.05

**காணாமல்போனோரின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக இருந்தால், அதற்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. அரசாங்கம் அதற்குத் தயாராகவே உள்ளது. ஆனால், அலுவலகம் தேவையில்லை என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

காணாமல் போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அலுவலகம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் அலுவலகத்தை நீண்டகாலத்துக்கு கொண்டு செல்ல முடியாது. அதனை விரைவில் இரத்துச் செய்ய நேரிடும்.

கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இந்த அலுவலகத்தை நாம் அமைத்தோம்.

ஜனநாயக சமூகத்தில்தொடர்ந்தும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இருக்குமென தெரிவிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும் அன்று இடம்பெற்ற விடயங்கள் முற்றிலும் மாறுபட்டவையென்றும் யுத்தகாலப் பகுதியென்பதால் நாளை என்பதே நம்பிக்கையற்ற நிலைமையாக அன்று இருந்ததாகவும் மக்கள் காணாமலாக்கப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட விடயதானங்கள் பல இருந்தனவென்றும் அது நாட்டில் தொடருமாக இருந்தால் இதனை ஜனநாயக நாடென கூற முடியாதென்றும் தெரிவித்தார்.

எப்போதும் காணாமல்போனவர்கள் தொடர்வார்களாக இருந்தால் அதற்கு ஆணைக்குழுக்கள் அவசியம் என்றால் நாட்டில் வேறு பிரச்னைகள் இருப்பதாகவே தோற்றப்பாடு வெளிப்படும் என்றும் ஆனால், அது அந்தப் பிரச்னைக்கு மாத்திரமானதாகவே இருக்க வேண்டும் என தான் நினைப்பதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (எ)



## வெடிபொருள்களுடன் நால்வர் கைதாகினர்

கொழும்பு,ஏப்.05

அனுமதிப்பத்திரம் இன்றி வெடிபொருள்களை கொண்டு சென்ற நால்வர் கைது செய்யப்பட்டனர்.

நாவுல, எலஹெர வீதியின் பகமுண பிரதேசத்தில் ஓட்டோவில் வைத்து குறித்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, 3 கிலோ 230 கிராம் அமோனியா, 135 வோடர் ஜெல் குச்சிகள், 20 கிராம் வெடிமருந்து, 14 டெட்டனேட்டர்கள் உள்ளிட்ட பொருள்கள் இதன் போது பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த சந்தேகநபர்கள் அவிசாவளை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## லொறி மோதியதில் சார்ஜண்ட் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.05

வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் லொறியொன்று மோதியதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு பழைய கெஸ்பேவ வீதியிலுள்ள கட்டிய சந்தியிலிருந்து தெல்கந்த நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் உயிரிழந்தவர் மருதானை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த புளத்சிங்கள பகுதியில் வசிக்கும் 47 வயது பொலிஸ் சார்ஜன்ட் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

## தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகளை கண்டறிய விஷேட பாராளுமன்றக் குழு

கொழும்பு,ஏப்.05

தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகளை கண்டறிவதற்கு விஷேட பாராளுமன்றக் குழுவொன்றை அமைப்பது குறித்த யோசனை பாராளுமன்றத்தில் இன்று திங்கள்கிழமை முன்வைக்கப்படவுள்ளது.

குறித்த குழுவுக்கு 15 உறுப்பினர்கள், சபாநாயகரால் தெரிவு செய்யப்படுவதுடன் குறித்த குழு 6 மாதத்துக்குள் தங்களது பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு பல அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்த புதிய சட்டமூலம் தொடர்பில் ஆராயும் ஆளும் கட்சியின் கூட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது.

மேலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (எ)

# மலையகத்தில் பலத்த பாதுகாப்புடன் உயிர்த்த ஞாயிறு தின நிகழ்வுகள்

ஹற்றன்,ஏப்.05

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதலை தொடர்ந்து இரண்டாவது வருட ஈஸ்டர் தின நிகழ்வுகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மலையக கிறிஸ்தவ தேவாலயங்களில் சுகாதார வழிமுறைகளுக்கு அமைய நேற்று இடம்பெற்றன.

ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தின் தேவ ஆராதனைகள் ஆலய பங்கு தந்தை நிவ்மன் பீரிஸ் தலைமையில் நடைபெற்றன.

இதன் போது உயிர்த்த ஞாயிறுதின திருப்பலி ஒப்புக்கொடுத்தல் இடம்பெற்றதுடன் உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்திக்காக விஷேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.



அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் புனித தீர்த்தமும் வழங்கப்பட்டது. (எ)

### சுபநேரம் மற்றும் அரசாங்கத்தின்

# அபிவிருத்தி செயல்பாடுகள் தொடர்பில் பெரமுன துண்டுப்பிரசுரம் விநியோகம்

நெலும்மாவத்தை, ஏப்.05

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன் னிட்டு சிறிலங்கா பொதுஜன பெரமுன வால் சுபநேரம் மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி செயல்பாடுகள் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் வகையில் துண் டுப்பிரசுரம் விநியோகிக்கும் நிகழ்வு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்தில் ஆரம்பமானது. இதேவேளை, மினுவாங்கொடையிலும் துண்டுப்பிரசுரம் விநியோக நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், சிறிலங்கா பொதுஜன பெரமுன வின் தவிசாளர், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கலந்துகொண்டிருந்தார். (எ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 28 - 06 - 1962 |  | 01 - 04 - 2021 |

## திரு.இராஜகோபால் சின்னத்தம்பி

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough, Ontario வை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகோபால் சின்னத்தம்பி 01.04.2021 வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை தம்பிகளின் ஐந்தாவது மகனும், காலஞ்சென்ற இரஞ்சன் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிரபாகினி (துளசி)யின் அன்பு கணவரும், வனுஜன், அனுஜன், சாருகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் தயாநிதி, சிவயோகநாதன், காலஞ்சென்ற வைகுந்தநாதன் ஆகியோரின் அன்பு சகோதரரும், சரோஜினிதேவி, சியாமளா, பத்மநாதன், மங்களேஸ்வரி, மனோரஞ்சிதம், வசந்தன், கௌரி, துசாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

வதணி, சிவகுமார், தனேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகலனும், கிரிசாந், கம்சா, பதுளா, ராகவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சனா, ரஜீவ்குமார், கஜன், நாவண்ணன், கஜீஸ்ராஜ், யர்சன், வினோஜன், சுவர்ணா, எழில், பிரசன்னா, சோபிக்கா, கிரிசோத், சுபிச்சா, அனுஸ்சிகா ஆகியோரின் சித்தப்பாவும், விதுசிகன், கலாகரன், அஞ்ஞனன், யானுதா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.04.2021) மாலை 6.30 (கனடா நேரப்படி) Chapel Ridge Funeral home and Cremation Centre இல் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

**மனைவி (பிரபாகினி (துளசி) - 4168219096, 4162863685**

**சகோதரன் சசிவயோகநாதன் (ஜேர்மனி): 004902152555876**

**சகோதரி - (தயாநிதி) (இலங்கை) :- 077 958 2533**

**மைத்துனன்: வசந்தன் : 6479791965**

**மைத்துனி: கௌரி : 6472489160**

**மைத்துனி: துசாந்தி : 6475195925**

புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பிறகு வைரஸ் தொற்றாதா?

## எச்சரிக்கும் நிபுணர்கள்!

நியூயோர்க், ஏப். 05

**கொரோனா வைரஸ் தடுப்பூசியை ஒருமுறை ஏற்றிவிட்டால் பிறகு வைரஸ் தொற்றாது என்ற திடமான நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. அதன்பின்னர் "மாஸ்க்" அணியாமல் சுதந்திரமாக சுற்றித் திரியலாம் என்று எண்ணும் பலரும்கூட இருக்கிறார்கள். இவை இரண்டுமே தப்புக் கணக்குகள் என்கின்றனர் தொற்றுநோயியல் நிபுணர்கள்.**

தடுப்பூசியைப் பெற்றபின், தொற்று நோய்க்கு முந்தைய பழைய வாழ்க்கைக்கு உடனே திரும்பி விட முடியாது. தடுப்பூசி ஏற்றிய பலர் மீண்டும் தொற்றுக்கு இலக்கானமை பற்றிய செய்திகள் உலகெங்கும் வெளியாகி வருகின்றன. தடுப்பூசி பெற்ற ஒருவர் பின்வரும் காரணங்களால் மீண்டும் வைரஸ் தொற்றுக்கு ஆளாக முடியும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மாஸ்க் அணிதல், கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளி பேணுதல் போன்ற சுகாதார அமைச்சின் முன்னெச்சரிக்கை ஒழுங்குகளைப் பின்பற்றாமல் நடப்பது- தடுப்பூசி தொடர்பாக மருத்துவர் தரும் ஆலோசனைகளைப் புறக்கணிப்பது - குறித்த தவணையில் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றத் தவறுதல் அல்லது இரண்டாவது டோஸை ஏற்றாமல் விடுதல் - உடற்காப்பு சக்தி தூண்டப்படுவதில் ஏற்படும் தடை- இத்தகைய காரணங்களால் ஒருவர் தடுப்பூசி ஏற்றிய பிறகும் தொற்றுக்கு உள்ளாக வாய்ப்புண்டு என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தடுப்பூசி என்பது வைரஸின் முடிவு அல்ல அது வைரஸின்தீவிரமான தாக்கத்தில் இருந்து உடலுக்குப் பாதுகாப்பு வழங்குவது மட்டுமே. அது தொற்றைத் தடுக்காது. தொற்றுக்கு எதிராக உடற்காப்பு சக்திகளைத் தூண்டி மரணத்தில் இருந்து காப்பாற்றும். எனவே தடுப்பூசி ஏற்றிய அனைவரும் தொடர்ந்தும் தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாக்கும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயம். அதேவேளை, தடுப்பூசி ஏற்றியவர்கள் தொடர்ந்தும் வைரஸை ஏனையோருக்குப் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். ஊசி அதனைத் தடுக்காது.

தடுப்பூசி ஏற்றிய ஒருவரின் உடலில் வைரஸ் கண்டுபிடிக்கப்படலாம். ஊசி ஏற்றிக்கொண்ட அடுத்த ஓரிரு நாட்களில் கூட தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால், ஊசி உடல்எதிர்ப்பு சக்தியைத் தூண்டி தொற்றின் தீவிரத்தைத் தணி த்து விடுகின்றது. எனவே, தடுப்பூசி போட்டுக் கொண்ட ஒருவரது உடலில் மீண்டும் சோதனை மூலம் வைரஸ் கண்டறியப்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், அவை வலுக்குறைந்த வைரஸாக இருக்கலாம்.

இதைவிட, வைரஸ் தடுப்பூசிகளின் பயன்பெறும் காலத்தின் பின்னர் மீண்டும் ஒருவர் தொற்றுக்கு ஆளாக நேரிடலாம். தற்போது பயன்பாட்டில்உள்ள பைசர் பயோஎன்ரெக் போன்றவை ஆறு மாதங்கள் பாதுகாப்பு அளிக்கக்கூடியவை என்று உத்தரவாதம் தரப்பட்டுள்ளது.

ஊசிகளின் உண்மையான வலு என்ன என்பதை அறிய இன்னமும் சில காலம் பொறுத்திருக்க வேண்டும். கொரோனா வைரஸும் அதன் திரிபுகளும் உலகின் எல்லா பகுதி களில் இருந்தும் ஒரே சமயத்தில் மறைந்து விடப் போவதில்லை. அதேபோன்று உலக மக்கள் அனை வருக்கும் தடுப்பூசி குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கிடைத்து விடவும் போவதில்லை. எனவே, அடுத்த சில வருடங்களுக்காவது எங்கோ ஓரிடத்தில் வைரஸ் தொடர்ந்தும் பரவிக்கொண்டு தான் இருக்கப் போகின்றது என்கிறார்கள் நிபுணர்கள். (ஐ)



# செயற்கை நகங்களை ஒட்டுவதற்கு பாவிக்கும் பசைகள் ஆபத்தானவை!

## எச்சரிக்கின்றது சுகாதார நிறுவனம்

பாரிஸ், ஏப். 05

கைவிரல்களில்செயற்கை யாக நகங்களை ஒட்டுவதற்குப் பயன்படுத்துகின்ற பசைகள் நச்சுத் தன்மை வாய்ந்தவை. தோலுக்கும் உடலுக்கும் கடுமையான தீங்கு விளைவிக்கக் கூடியவை என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் உணவு, சுற்றுச் சூழல் மற்றும் தொழில்சார் சுகாதார பாதுகாப்புக்கான தேசிய நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

அதிகமான பிரெஞ்சு மக்கள் குறிப்பாகப் பெண்கள் வீடுகளில் விரல் நகங்களை அழகுபடுத்தும் இவ்வாறான அழகியல் பராமரிப்புகளில் ஈடுபடுகின்றனர். நகங்களை ஒட்டுவதற்காக கடைகளிலும் இணையம் மூலமும் வாங்குகின்ற 'சயனோஅக்ரிலேட்' பசைகள் தொடர்பாகவே சுகநலப் பாதுகாப்பு நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது.

"சயனோஅக்ரிலேட்" பசைகள் நேரடியாக தோலுடன் தொடர்புபடும்போது பெரிய காயங்களை ஏற்படுத்துவதில்லை. ஆனால் அது பஞ்சு மற்றும் துணி போன்றவற்றுடன் சேரும் போது வேதியல் செயல்பாடு காரணமாக அதிக வெப்ப மாற்றத்துக்கு உள்ளாகி தோலில் கடுமையான தீக்காயங்களை உண்டாக்கலாம் என்று சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)



# நக்சல்களின் தாக்குதலில் 5 இராணுவத்தினர் மரணம்!

## 30 பேர் காயம் 18 பேர் மாயம்!

புதுடில்லி, ஏப். 05

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்கள் நடத்திய திடீர் தாக்குதலில் இந்திய இராணுவத்தினர் ஐவர் கொல்லப்பட்டனர். 30 பேர் வரை காயமடைந்துள்ளனர். தாக்குதலை அடுத்து 18 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் பல மாவட்டங்களில் நக்சலைட்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இவர்களை ஒடுக்க அங்கு விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். எனினும், இராணுவத்தினர் மீது அவ்வப்போது நக்சலைட்கள் பதுங்கியிருந்து தாக்குதலை நடத்தி வருகின்றனர். கடந்த மார்ச் 23ஆம் திகதி நாராயண்பூர் மாவட்டத்தில் அவர்கள் நடத்தப்பட்ட தாக்குதலிலும் 5 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பீஜப்பூர் மாவட்ட எல்லையில் உள்ள டர்ரம்வனப்பகுதியில்நக்சலைட்களை தேடும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். இதன்போது, பதுங்கியிருந்த நக்சலைட்கள் தாக்குதல் நடத்தினர். இதில், 5 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர். 18 பேர் காணாமல் போயுள்ளனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்திய நக்சலைட்கள் தப்பி விட்டனர். அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து 18 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் இராணுவத்தினரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அமெரிக்காவில் விருந்து வீட்டில் துப்பாக்கிச் சூடு!

## மூவர் உயிரிழப்பு

நியூயோர்க், ஏப். 05

விருந்து நடந்த வீட்டில் மர்ம நபர்கள் துப்பாக்கி சூடு நடத்தியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் கரோலினா மாநிலத்தில் - வில்மிங்டன் நகரில் நேற்று முன்தினம் இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த விருந்தில் 7 பேர் கலந்து கொண்டிருந்தனர். திடீரென அவர்களை நோக்கி மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கி சூடு நடத்தி உள்ளனர். இதில், சம்பவ இடத்தில் 3 பேர் உயிரிழந்தனர். நால்வர் காயமடைந்தனர்.

உடனடியாக மீட்கப்பட்ட அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். குற்றவாளிகளை தேடி வருவதாக வில்மிங்டன் நகர தலைமை பொலிஸ அதிகாரி டானி வில்லியம்ஸ் கூறியுள்ளார்.

## சுயஸ் கால்வாய் ஸ்தம்பிதம்:

# முதல் பெண் கப்டன் மீது போலிக் குற்றச்சாட்டு!

கெய்ரோ, ஏப். 05

எகிப்தின் முதல் பெண் கப்பல் கப்டனான மார்வா எல்செல்தாருக்கு எதிராக சுயஸ் கால்வாய் ஊடான போக்குவரத்தை தடுத்து நிறுத்தினார் என்று போலி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.



எனினும், உலகின் மிக மூலோபாய கப்பல் வழித்தடங்களில் ஒன்றான சுயஸ் கால்வாயின் குறுக்கே எவர் கிறின் என்ற கொள்கலன் கப்பல் பற்றிய தகவல்கள் வெளியானபோது 29 வயதான எல்செலெதார் மத்தியதரை கடல் துறைமுக நகரமான அலெக்ஸாண்ட்ரியாவில் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் கடமையில் இருந்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டு குறித்து கருத்து தெரிவித்துள்ள எல்செலெதார், இந்த தகவலை கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். இந்த துறையில் நான் ஒரு வெற்றிகரமான பெண் என்பதால் அல்லது நான் எகிப்தியனாக இருப்பதால் இலக்கு வைக்கப்படலாம் என்று நான் உணர்ந்தேன் என்றார்.


சுயஸ் கால்வாயில் மிகப்பெரிய கொள்கலன் கப்பல் சிக்கியதன் விளைவாக உலகம் முழுவதும் வர்த்தகத்தை பாதித்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. கிட்டத்தட்ட ஒரு வாரமாக மீட்பு முயற்சிகள் நடந்து கொண்டிருந்ததால், 350 க்கும் மேற்பட்ட கப்பல்கள் சுயஸ் கால்வாயைக் கடக்கக் காத்திருந்தன. இந்தக் கப்பல் மார்ச் 29 அன்று விடுவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் தொடக்கம் சுயஸ் கால்வாயில் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

# ரஷ்யத் தடுப்பூசி இருமுறை ஏற்றிய ஆஜென்ரீனா அதிபருக்கு தொற்று!

ரியோடிஜெனிரோ, ஏப். 05

ஆர்ஜென்ரீனாவின் ஜனாதிபதி அல் பேர்ட்டோ பெர்னான்டெஸ் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உள்ளார் என்ற தகவலை தனது ருவிட்டரில் பதிவு செய்துள் ளார்.

முதலாவது பரிசோதனை தொற்றை உறுதி செய்துள்ளது என்றும் இரண்டாவது பி.சி.ஆர். சோதனை முடிவுக்காகக் காத்திருப்பதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டிருக்கிறார். வெள்ளியன்று தனது 62 ஆவது பிறந்த நாளைக் கொண்டா டிய அவர் தேகாரோக்கியத்துடன் சுய தனிமையில் இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி அல்பேர்ட்டோ கடந்த பெப்ரவரியில் ரஷ்யத் தயாரிப் பாகிய 'ஸ்புட்னிக் - 5' தடுப்பூசியின் இரண்டாவது டோஸை ஏற்றிக் கொண்டார் என்று அதிகாரிகள் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.



தென்னமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனா நாட்டை வைரஸின் இரண்டாவது அலை மிகமோசமாகத் தாக்கி உள்ளது. இது வரை 23 இலட்சம் பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 55 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.பி.எல். கிரிக்கெட் தொடர்: வடக்கின் வல்லூறுகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 05

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இடையே நடந்த மென்பந்து கிரிக்கெட் தொடரில் வடக்கின் வல்லூறுகள் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

சி.பி.எல். எனப்படும் கூட்டுறவு பிறிமியர் லீக்கின் மூன்றாவது தொடர் நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை புங்கன்குளம் மைதானத்தில் நடந்தது.

6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இந்தத் தொடரின் முதல் போட்டியில் வடக்கின் வல்லூறுகள் - கிளிநொச்சி கில்லிகள் அணியை எதிர் கொண்டது. இதில் 9 ஓட்டங்களால் வடக்கின் வல்லூறுகள் அணி வெற்றி பெற்றது. இதன் ஆட்டநாயகனாக பாலரவி தெரிவானார்.

அடுத்த போட்டியில் யாழ் யாளிகள் - முல்லை முத்துக்கள் மோதின. இதில் முல்லை முத்துக்கள் 10 விக்கெட்களால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கஜேந்திரன் தெரிவானார்.

மூன்றாவது போட்டியில், மன்னார் மன்னர்கள் - வடக்கின் வல்லூறுகள் பொருதின. வடக்கின் வல்லூறுகள் அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக ஜெயந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ் யாளிகள் - வவுனியா வைரங்கள் மோதிய போட்டியில் வவுனியா வைரங்கள் 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக பிரதீஸ்குமரன் தெரிவானார்.

மன்னார் மன்னர்கள் - கிளிநொச்சி கில்லிகள் மோதிய போட்டியில் மன்னார் மன்னர்கள் 9 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக பிரமிலன் தெரிவு செய்யப்பட்டார்.



வவுனியா வைரங்கள் - முல்லை முத்துக்கள் மோதிய போட்டியில் முல்லை முத்துக்கள் 9 விக்கெட்களால் வெற்றி பெற்றது. இதில் ஆட்டநாயகனாக சசி தெரிவானார்.

இதைத் தொடர்ந்து நடந்த அரையிறுதி போட்டிகள் நடந்தன. முதல் போட்டியில், வவுனியா வைரங்கள் - வடக்கின் வல்லூறுகள் மோதின. இதில் வடக்கின் வல்லூறுகள் 8 விக்கெட்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு நுழைந்தது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பாலரவி தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது அரையிறுதியில், மன்னார் மன்னர்கள் - முல்லை முத்துக்கள் அணிகள் மோதின. இதில், 66 ஓட்டங்களால் முல்லை முத்துக்கள் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
ஆட்டநாயகனாக சசி தெரிவானார்.

இறுதிப் போட்டியில், முதலில் ஆடிய வடக்கின் வல்லூறுகள் அணி, 6 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயந்தன் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முல்லை முத்துக்கள் அணி 3 விக்கெட் இழப்புக்கு 53 ஓட்டங்களை எடுத்து 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பவல்ராஜ் 21 ஓட்டங்களை எடுத்திருந்தார். இறுதிப் போட்டியின் நாயகனாக ஜெயந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றிக் கிண்ணத்தை வென்ற வடக்கின் வல்லூறுகள் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. இதேபோல இரண்டாவது இடம் பிடித்த முல்லை முத்துக்கள் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 15 ஆயிரம் ரூபா ரொக்கமும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசுகளை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் வட மாகாண முன்னாள் ஆணையாளர் பொ. வாகீசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

தொடரின் சிறந்த வீரராகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக முல்லை முத்துக்கள் அணியின் சசி தெரிவானார். சிறந்த பந்து வீச்சாளராகவும் அதே அணியின் பவல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



## றொனால்டோ எறிந்த கை பட்டி ஒன்றரை கோடி ரூபாவுக்கு ஏலம்

லிஸ்பன், ஏப். 05

றொனால்டோ கோபத்தில் தூக்கி எறிந்த கை பட்டி 75 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஒரு கோடியே 46 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போனது.

அண்மையில் நடந்த போட்டியில் போர்த்துக்கல் அணி, சேர்பியாவை சந்தித்தது. பெல்கிரேட் நகரில் நடந்த இந்தப் போட்டி 2 - 2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் மேலதிக நேரத்தில் றொனால்டோ கோல் ஒன்றை அடித்தார். இதனை நடுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் கோபம் அடைந்த றொனால்டோ, ஆட்டத்தை முடிவுறுத்துவதற்கான விசிலை நடுவர் ஊதும் முன்னரே மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அப்போது கையில் அணிந்திருந்த கப்டனுக்கு உரிய நீல நிற பட்டியை கழற்றி வீசி எறிந்தார். இதை அங்கிருந்த தீயணைப்பு வீரர் ஒருவர் எடுத்து அறக்கட்டளை ஒன்றிடம் வழங்கினார்.

இந்தப் பட்டி ஏலத்தில் விடப்பட்டது. மூன்று நாட்கள் நடந்த ஏலத்தில், ஒருவர் 75 ஆயிரம் டொலர்க் கொடுத்து அதனை வாங்கினார். இந்தப் பணம் முதுகெலும்பு தசைநார் கிழிவால் அவதிப்படும் 6 மாத குழந்தையின் மருத்துவ செலவுக்கு வழங்கப்பட்டது. (ஐ)

## மியாமி ஓப்பன் ரென்னிஸ்: ஆஷ்லே பார்டி சம்பியன்!





மியாமி, ஏப். 05

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உலகின் முதல்நிலை அவுஸ்திரேலியாவின் வீராங்கனையான ஆஷ்லே பார்டி சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் தொடரான மியாமி ஓப்பன் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமானது. இதன் இறுதியாட்டம் கடந்த 3ஆம் திகதி நடந்தது.

இதில், கனடாவின் பியாங்கா அண்ட்ரெஸுவை ஆஷ்லே பார்டி எதிர்கொண்டார். முதல் செற்றை 6 -3 என்ற கணக்கில் ஆஷ்லே வெற்றி கொண்டார்.

இரண்டாவது செற்றில் 4 -0 என்ற கணக்கில் ஆஷ்லே முன்னிலையில் இருந்தபோது, பியாங்கா கணுக்கால் சுளுக்கால் பாதிக்கப்பட்டார். இதனால் அவர் கட்டாயம் ஓய்வு எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இதனால் முன்னிலையில் இருந்த ஆஷ்லே பார்டியின் வசம் சம்பியன் பட்டம் சென்றது. (ஐ)

## மேற்கிந்தியா - இலங்கை டெஸ்ட் தொடர் சமநிலை!

அன்டிகுவா, ஏப். 05

மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிந்தன. இதனால் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரும் சமநிலையில் முடிவடைந்தன.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்ற இலங்கை அணி 3 இருபது - 20, 3 ஒருநாள் தொடர், 2 டெஸ்ட் தொடர்களில் பங்கேற்றது. இருபது - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் இழந்த இலங்கை அணி, ஒருநாள் தொடரை 3 - 0 என்ற கணக்கில் இழந்தது.

முதல் டெஸ்ட் போட்டியை சமன் செய்த அணி, 29ஆம் திகதி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளுடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி பிராத் வெயிட்டின் சதத்தால் 354 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு ஆடிய இலங்கை அணி 258 ஓட்டங்களை எடுத்தது.
இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களை எடுத்த மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.



இதனால், இரண்டாவது இனிங்ஸில் இலங்கைக்கு 377 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது இனிங்ஸில் இலங்கை வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர்.

டிமுத் கருணாரத்ன 75 ஓட்டங்களையும், திரிமன்னே 39 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஓஸத பெர்னாண்டோ 66 ஓட்டங்களையும் தினேஷ் சந்திமால் 10 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தபோது இறுதிநாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

அப்போது இலங்கை அணி 2 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனர்களுக்கு முன்னுரிமை

# சீனோபார்ம் தடுப்பூசி இன்று முதல் பாவனை



கொழும்பு, ஏப்.05

**ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமையவே சீனோபார்ம் கொரோனா தடுப்பூசி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது எனவும் முதற்கட்டமாக இலங்கையில் வசிக்கும் சீனப் பிரஜைகளுக்கு செலுத்தப்பட உள்ளதுடன், சீன தூதரகத்துடன் இணைந்து சீனர்களுக்கு முன்னுரிமையளிக்கும் வகையில் தடுப்பூசி ஏற்றும் செயல்பாடுகள் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விஷேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன மற்றும் துறைசார் நிபுணர்களின் பங்கேற்புடன் கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் அமர்வு நடைபெற்றது.

இதன்போது தொற்றாளர்களை இனம்காணும் நடவடிக்கைகள், புதிய முன்னேற்றங்கள் மற்றும் அவசரகால நடவடிக்கைகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், புதிய வைரஸ் பரவலை முகாமைத்துவம் செய்தல் நிர்வகித்தல், பொது மக்களின் நடத்தைகள், பொது மக்களுக்கு சிரமம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின்படி தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் வகையிலான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவர் வலியுறுத்தினார்.

அத்தோடு நாடளாவிர ரீதியில் தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்ற போதிலும், சுகாதார அறிவுரைகளை வலுவாக பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய செயலணியின் தலைவர், அண்மையில் பண்டிகை காலம் வரவிருப்பதால் பாதுகாப்பு செயல்பாடுகளை தொடர்ச்சியாக தக்கவைத்து கொள்வது குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

சீனாவின் தயாரிப்பான சீனோபார்ம் தடுப்பூசிகள் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமையவே கொண்டு வரப்பட்டதாகவும், அவை முதற்கட்டமாக இலங்கையில் வசிக்கும் சீனப் பிரஜைகளுக்கு செலுத்தப்பட உள்ளதுடன், சீன தூதரகத்துடன் இணைந்து அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தடுப்பூசி ஏற்றும் செயல்பாடுகள் இன்று முதல் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார்.

# நாட்டையோ, ரூபா பெறுமதியையோ அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



கொழும்பு,ஏப்.05

தற்போதைய அரசாங்கத்தால் ரூபாயின் பெறுமதியையும் நாட்டையும் கட்டுப்படுத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதியைக் குறைப்பதன் ஊடாக நாட்டின் நிலைமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதாவது, சிம்பாவேயின் நிலைக்குள் படிப்படியாக இலங்கை நகர்கிறது எனவும் சஜித் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவது குறித்து அரசாங்கம் ஏற்கனவே கவலை கொண்டுள்ளது என நிதி, மூலதன சந்தைகள் மற்றும் பொது நிறுவன சீர்திருத்தங்கள் துறை அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது ஒரு தற்காலிக சம்பவம் என்றும், எதிர்காலத்தில் ரூபாயை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பட்டப்பகலில் 19 வயது யுவதி படுகொலை

கொழும்பு, ஏப்.05

கலேவெல, பட்டிவெல சந்தியில் பட்டப்பகலில் கூரிய ஆயுதத்தால் தாக்கி யுவதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

19 வயது யுவதி ஒருவரே இவ் வாறு கொலை செய்யப்பட்டார்.

குடும்பப் பிரச்னை காரண மாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆரம் பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர் பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ)

# சொந்த இடங்களுக்கு செல்வோரிடம் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பு

கொழும்பு, ஏப்.05

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்பவர்களை இலக்காகக் கொண்டு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

வர்த்தக வலயங்களில் தொழில் புரிபவர்கள் மற்றும் கட்டுமான தொழில் புரிபவர்கள் உள்ளிட்ட குழுவினர் இதில் பிரதானமாக உள்ளடக்கப்படுவார்கள் என்று தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அடுத்த வாரம் தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதன் நிமித்தம் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் தொழில்புரிபவர்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வார்கள்.

குறிப்பாக வர்த்தக வலயங்கள், கட்டுமான தொழிலில் ஈடுபடுபவர்களே அதிகளவில் கிராம பகுதிகளுக்குச் செல்வர்.

இவர்களில் ஒருவருக்கேனும் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தால் அவர்கள் மூலம் கிராமங்களில் வைரஸ் பரவக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது.

எனவே தான் இவர்களை இலக்காகக் கொண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுதத்சமரவீர தெரிவித்தார். (எ)

# வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 268 பேர் நாட்டை வந்தடைந்தனர்

கொழும்பு,ஏப்.05

வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 268 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு தொழில் வாய்ப்புக்காகச் சென்று, அங்கு பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து, நாடு திரும்ப முடியாமலிருந்த 268 இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பினர்.

இவர்கள் அனைவரும் சிறிலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விஷேட விமானங்கள் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகை தந்துள்ள அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# கடல் வழியாக தமிழகம் சென்ற மன்னாரை சேர்ந்த இருவர் கைது

சென்னை,ஏப்.05

சர்வதேச கடல் வழியாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்த மன்னாரைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளால் இவர்கள் இருவரும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு பைபர் படகு மூலம் சட்டவிரோதமாக இலங்கையைச் சேர்ந்த இருவர் வந்து இறங்கியதாக இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச்சென்ற சுங்கத்துறை அதிகாரிகள் இருவரையும்கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணையின் போது கைதான இருவரும் மன்னார் மாவட்டம் அடம்பன் பகுதியைச் சேர்ந்த பிரதாப் மற்றும் நாதேஷ் எனத் தெரியவந்துள்ளது. இவர்களை திண்டுக்கல் மாவட்டத்தின் பழனியைச் சேர்ந்த ஒருவர் வேலை தருவதாகக் கூறி தமிழகத்துக்கு வரவழைத்தாக தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இருவரையும் கைது செய்த மெரைன் பொலிஸார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

## 'எனது தொகுதியில் உள்ளவர்களுக்கு கசிப்பு வேண்டும்'

# இராஜாங்க அமைச்சரின் கருத்தால் மீண்டும் உருவாகியுள்ள சர்ச்சை

கொழும்பு, ஏப்ரல் 05

தனது தொகுதியில் அதிகமான தொழிலாளர்கள் உள்ளனர் என்றும் அவர்கள் கசிப்பை விரும்புகிறார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் அருந்திகா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வார இறுதி சிங்களப் பத்திரிகை ஒன்றிக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நான் பாரிய அளவில் கசிப்பு உற்பத்தி செய்பவர்களைதான் கைது செய்ய வேண்டும் என்று கூறியிருந்தேன். மாறாக சிறிய அளவில் உள்ளவர்களை அல்ல. என்னுடைய தொகுதியில் 300 செங்கல் தயாரிக்கும் இடங்கள் உள்ளன. ஓடு உட்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன , இதில் அதிகமான தொழிலாளிகள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு கசிப்பு கட்டாயமாக வேண்டும், கசிப்பு உற்பத்தியை நான் சுய தொழிலாக செய்யும்படி கூறவில்லை. மக்களுக்கு சுயதொழில்களை வழங்கி, பின்னர் கசிப்பு தொழிலை சிறிய அளவில் குறைக்க சொல்லியிருந்தேன்.

மேலும் ஏஎஸ்பி எரிக் பெரேரா குறித்தும் நான் அங்கு கருத்து தெரிவித்திருந்தேன். அவர் தொடர்பில் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவை நான் முன்வைத்தவை அல்ல. அவர் தொடர்பில் நீதிமன் றத்தில் வழக்கு உள்ளது. மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றச் சாட்டுக்கள் உள்ளன. எனவே தான் அவர் மாற்றப்பட்டுள்ளார். மேலும் அவர் கசிப்பு தயாரிப் பவர்களை கைது செய்திருப்பதால் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ள னர்" எண்று தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வாறு கசிப்பு தயாரிப்புக்கு ஆதரவாக குரல் கொடுப்பது தொடர்பில் சமூகத்தின் மத்தியில் பலத்த விமர்சனம் எழுந்துள்ளது. போதை தரக்கூடியய விடையங்களை மக்களுக்கு அனுமதிக்கும்படி கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என சிங்கள ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## உயர்கல்வியைத் தொடர இந்தியா புலமைப்பரிசில்

கொழும்பு, ஏப்.05

கலாசார உறவுகளுக்கான இந்திய உயர்ஸ்தானியராலயம் 2021 - 2022 கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்மைய நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம், மௌலானா ஆசாத் புலமைப்பரிசில் திட்டம், ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம், பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம் என்பவற்றின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இவற்றை வழங்குதற்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவு செய்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழங்களில் பட்டப் படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதி பட்டங்களுக்கான கற்கையை தொடர்வதற்கு விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் கல்வி அமைச்சுடன் கலந்தாலோசிக்கப்படும்.

அனைத்து புலமைப்பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படை சலுகை கட்டணம் மற்றும் புத்தகங்கள் காகிதங்களுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகிறது. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

மேலும் இந்தியாவிலுள்ள அனைத்து ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கும், இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமான கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவனவும், இவற்றை விட ஏனைய பல்வேறு சலுகைகளும் வழங்கப்படும்.

தேவையான மேலதிக தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk என்ற இணையதளத்தில் பார்வையிட முடியும். இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள விரும்புபவர்கள் கல்வி அமைச்சு அல்லது இந்திய உயர்ஸ்தானிகராலயத்தை தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# சிங்கள மொழி மட்டும் இந்நாட்டில் அரச கரும மொழியாக வேண்டும்!

### அரசியலமைப்பு குழுவிடம் தேரர்கள் யோசனை!!

கொழும்பு, ஏப்.05

**‘இந்த நாடு சிங்கள நாடாக இருக்கவேண்டும். அதே போல அரச மொழியாக சிங்கள மொழி மட்டும் இருக்க வேண்டும்” என நாட்டின் பிரதான தேரர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.**

புதிய அரசியலமைப்பை உருவாக்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவிடம் தங்கள் கருத்துகளையும் பரிந்துரைகளையும் நாட்டின் பிரதானமான தேரர்கள் வழங்கியுள்ளனர். அதன் போதே இந்தக் கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்திருக்கும் புதிய அரசியல் அமைப்பின் நிபுணர் குழு அலுவலகத்தில் வைத்து குறித்த பரிந்துரைகள் மகாநாயக்க தேரர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போது நாட்டின் பெயரில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட பெங்கமுவே நாளாக தேரர், ‘இந்த நாட்டிடம் இப்போது உள்ள பெயரில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இது ஒரு சிங்கள பௌத்த நாடு ஆகவே “சிறிலங்கா ஜனரா ஜாய” (சிறிலங்கா குடியரசு) என்று பெயர் மாற்றப்படவேண்டும். அதற்காக நாம் பரிந்துரைகளை முன் வைத்துள்ளோம். அதேபோன்று ஒரு போதும் அதிகார பகிர்வுக்கு இடமளிக்கக் கூடாது” என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பூமியைப் பற்றி மட்டுமல்ல, வானம், கடல் மற்றும் விலங்குகள் பற்றியும் இந்த அரசியல் அமைப்பு முன்மொழிவில் பேசியிருக்கின்றோம், இன்னும் பல் முன்மொழிவுகளை வழங்குவதற்கு தீர்மானித்துளோம்.

அது மாத்திரமல்ல அரசியல் கட்சிகள் எங்கள் முன் தமது கொள்கை பிரகடனத்தை தேர்தல்களின் போது வெளியிடுகின்றன. ஆனால் அவற்றில் உள்ளவற்றை சரியாக நிறைவேற்றுகின்றனவா என்ற கேள்வி உள்ளது. அவ்வாறு நிறைவேற்றப்படாவிட்டால் எங்களால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்” எனத் தெரிவித்தார்.

அதேவேளையில், “இந்த நாடு சிங்கள நாடாக இருக்கவேண்டும். அதேபோல அரச மொழியாக சிங்கள மொழி மட்டும் இருக்க வேண்டும்” என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

மேலும், “இந்த நாட்டின் வரலாறுப் பிரி வுகளான ருஹூனு , மாயா போன்ற பகுதிகள் நிர்வாக பகுதிகளாக மாற்றம் அடைய வேண்டும். எங்களுடைய இந்த முன்மொழிவுகள் பற்றி சிறந்த அவதானம் செலுத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது” எனவும் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் கம்பஹா மாவட்ட மக்கள் அசமந்தம்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி விசனம்

கொழும்பு,ஏப்.05

கம்பஹா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸுக்கு எதிரான அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியை செலுத்திக் கொள்ள பங்கேற்பது மிகக்குறைவு என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி நடவடிக்கையின் முன்னேற்றத்தை மறுஆய்வு செய்வதற்காக கம்பஹா மாவட்டத்துக்குச் சென்ற நிலையில், மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் இதுவரை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 223 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமை



தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இதில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் 40 வீதம் மட்டுமே அடங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஏ)



# ஐ.நா. தீர்மானத்தை அரசு நிராகரிக்கவே முடியாது!

### ஜனாதிபதிக்கு சம்பந்தன் பதிலடி

திருகோணமலை, ஏப்.05

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46-1 தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அரசியல் தேவைக்காகவே எதிர்ப்பதாகக் கூறி எதிர்வாதம் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால், இலங்கை அரசாங்கத்தால் அந்தத் தீர்மானத்தை நிராகரிக்கவே முடியாது.

காலப்போக்கில் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா அழுத்தங்களுக்கு அச்சமின்றி முகங்கொடுப்பதோடு அதற்கு அடிபணியாமல் இருக்க முடியும் எனவும் இலங்கை ஒரு சுதந்திர நாடு என்றவகையில் இந்தியப் பெருங் கடலில் நடக்கும் அதிகாரப் போட்டிகளுக்கு நாங்கள் இரையாக மாட்டோம் எனவும் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இம்முறை நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களா? என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுபோன்று தீர்மானங்கள் முன்னரும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை அனைத்தையுமே நிராகரிக்க முடியாது. அவ்வாறு நிராகரிப்பதாக கூறுவதானது, சர்வதேச தீர்மானங்களை மீறுவதாக அமையும். அதுமட்டுமன்றி சர்வதேசத்துடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களையும் மீறுவதாகவே அமையும். இது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இனரீதியான மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

முன்னதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினரின் அறிக்கையில் இந்த சம்பவங்கள் விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையிலும் அவ்விதமான சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆகவே, அந்தக் குற்றச்சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியுள்ளன. இது மிகவும் முக்கியமானதாகும். இலங்கை அரசாங்கம் அவ்விதமான விசாரணைகளை முன்னெடுத்திருக்கவில்லை. எனவே அவை தொடர்பான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.அக்கருமம் காலப்போக்கில் நிச்சயமாக இடம்பெறும்- என்றார். (ஏ)

# விபத்தில் 22 வயது இளைஞன் மரணம்!

கொழும்பு, ஏப்.05

கித்துல்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் களுகொவுத்தென் கம்பி பாலத்துக்கு அருகில் நேற்றுக்காலை இந்த விபத்து இடம்பெற்றது.

டயகம பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் எட்டியாந்தோட்டைப் பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

எனினும் கனரக வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதாக கித்துல்கல பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் டயகம முதலாம் பிரிவைச் சேர்ந்த அதிர்ஷ்டநாதன் கோபிநாதன் (வயது - 22) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்
**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் டு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் ஆலய திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் ஆலய திருவிழா

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்தூர்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org